விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Sri Lanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 21 திங்கட்கிழமை (03.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047

# பெண் ஊடகவியலாளர் குத்திக்கொலை



(கொழும்பு)
ஏ.எப்.பி செய்தி சேவையின் முன்னாள் பெண் ஊடகவியலாளர் மெல் குணசேகர நேற்று குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள அவரது வீட்டில் கொலை செய்யப்பட்டு, இறந்த நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டதாக பத்தரமுல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

குணசேகர தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார். பெற்றோர்கள் தேவாலயததிற்கு சென்றிருந்த போதே இவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெற்றோர் வீடு திரும்பிய போது மெல் குணசேகர வீட்டில பிணமாக கிடந்துள்ளார் இதனை யடுத்து பெற்றோர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

குறித்த கொலை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர் சுமித் எதிரி சிங்கவன் உத்தரவின் பேரில ஆறு குழுக்கள் நியமக்கப்பட்டுள்ளன.

கொலையாளி அல்லது கொலையாளிகளை கண்டு பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நுகே கொட

20 ஆம் பக்கம் பார்க்க..

## சர்ச்சைக்குள்ளாகும் வடக்கின் பிரேரணை

(கொழும்பு)
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரி வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஒன்றிணைந்த சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க..

## ஊடகவியலாளர் கொலை துப்புக்கிடைத்துள்ளது

(கொழும்பு)
இலங்கையின் பெண் ஊடகவி யலாளர்களில் ஒருவரான மெல்குண சேகர குத்திக் கொலலப்பட்டுள்ளார்.

மெல் குணசேகரவின் சடலம் கூரிய ஆயுதமொன்றால் குத்தப்பட்ட காயங்களுடன் கொழும்பிலுள்ள அவ்ரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

ஊடகத் தொழில் காரணமாகத் தான் அவர் கொல்லப்படடாரா என்பது உடனடியாகத் தெரியவில்லை என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

எனினும் கொலையாளியை கண்டு பிடிக்க க

20 ஆம் பக்கம் பார்க்க..

## 21 அடி உயரமான தியான திருச்சொரூபம்



(யாழ்ப்பாணம்)
மாதகல்-சம்பில் துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் சிவதொண்டர் அமைப்பால் அமைக்கப்பட்ட வட மாகாணத திலேயே உயரமான சிவபெருமானின் 21 அடி உயர தியான திருச் சொரூபத்திற்கான திருக குடமுழுக்கு நேற்று காலை 8 மணி முதல் செந்தமிழ் திருமுறை ஓத லுடன்நடை

19 ஆம் பக்கம் பார்க்க..

## நேபாள இராணுவ தளபதிக்கு பலாலியில் செங்கம்பள வரவேற்பு



(யாழ்ப்பாணம்)
நேபாள நாட்டின் பிரதான இராணுவத்தளபதி ஜெனரல் ஜங் பகதூர் ராணா உள்ளிட்ட குழுவினருக்கு யாழ்.பலாலி விமானத்தளத்தில் செங்கம்பள வரவேறபு அளிக்கப்பட்டது. இலங்கைக்கு உத்தியோக

20 ஆம் பக்கம் பார்க்க..

தவறான ஆற்றுப்படுத்தல்களில் இளைஞர்களின் உள்ளங்கள்!
தமிழர்களின் நிலைப்பாட்டை வடக்கின் முதல்வர் விரிவுபடுத்தியுள்ளார்
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

உலகக்கிண்ணம் 2015
விளையாட்டு பக்கம் 18

மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்
செய்திகள் பக்கம் 05

புலிகள் வீழ்ச்சி
செய்திகள் பக்கம் 13

சிங்கள குடியேற்றத்தை தடுக்க முடியாது.
செய்திகள் பக்கம் 07

## இராணுவ குடியிருப்பாக வலி.வடக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)
இராணுவக்குடியிருப்பாக வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயம் மாற்றப்பட்டுவருகின்றது.

இதற்கான அறிவிப்பை விடும் வகையில் வசாவிளான் பாடசாலைக்கு அண்மையில் பலாலி வீதியில் கற்களினால் மிகவும் பிரமாண்டமாக கட்டப்பட்ட பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில்

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஜே.வி.பியின் புதிய தலைவர் அனுரகுமார



(கொழும்பு)
ஜே.வி.பியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற ஜே.வி.பியின் 7-வது தேசிய மாநாட்டில் அவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

ரோஹன விஜேவீர, சோமவன்ஸ அமரசிங்கவுக்கு பின்னர் அந்த கட்சியின் மூன்றாவது தலைவராக அனுரகுமார திஸாநாயக்க தெரிவாகியுள்ளார்.

ஜே.வி.பியின் தலைவராக அனுரகுமார திஸாநாயக்க தெரிவு

20 ஆம் பக்கம் பார்க்க..

## வட மாகாண வைத்தியசாலைகளில் தொடரும் வைத்தியர் பற்றாக்குறை

### வடக்கு சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)
வடமாகாண வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆகவே இது தொடர்பில்மத்திய சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், வட மாகாணத்தில் 38 வைத்


19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுபான்மையினர் உரிமைகளை பெற சிங்களவர்கள் தலையிட வேண்டும்

## கலாநிதி விக்ரமபாகு சுட்டிக்காட்டு



இலங்கையின் சிறுபான்மையினர் சுயநிர்ணய உரிமைகளுக்காக தொடர்ந்தும் போராடி வந்தனர் எனவும் அதனை பெற்றுக் கொடுக்கவும் முன்னோக்கி கொண்டு செல்லும் சிங்கள சமூகம் தலையிட வேண்டும் என நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுபான்மை மக்களின் சுயநிர்ணய உரிமையை பெற்றுக் கொடுக்க சிங்கள சமூகம் தலையிடுவதன் ஊடாக உண்மையான சமாதானத்தை உலகத்திற்கு காட்ட முடியும்.

நாங்கள் பாரிய அர்ப்பணிப்புகளை செய்து சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இன்ங்களின் ஐக்கிய கூட்டணியை கட்டியெழுப்பி உள்ளோம். இதன் மூலம் இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும்.

1920 ஆம் ஆண்டுகளில் சிலோன் காங்கிரஸ் என்ற ஐக்கிய கூட்டணி கட்டியெழுப்பப்பட்டது. எனினும் அதில் இருந்த சில தமிழ தலைவர்கள் விலகி சென்றனர். சிங்களவர்கள் சிங்கள இனம் பற்றி மட்டுமே பேசியதால் அன்று அருணாசலம் அந்த கூட்டணியை விட்டு வெளியேறினார். வரலாறு முழுவதும் சிங்களவர்கள் சிங்களவர்களை பற்றி மட்டுமே பேசி வந்ததால்தான், இனப்பிரச்சினை ஏற்பட்டது. இந்த தவறை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் என விக்ரமபாகு தெரிவித்தார். (செ-4)

## கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 24 மணி நேர அம்புலன்ஸ் சேவை

### பற்சிகிச்சையும் ஆரம்பிப்பு




021 226 4608


வடமராட்சி கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலையில் பற்சிகிச்சையும், 24 மணிநேர அம்புலன்ஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கரவெட்டி ஒன்றியத் தலைவர் உப்பாலி பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, பற்சிகிச்சை திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 4.30 வரையும், சனிக்கிழமை காலை 8.30 முதல் பிற்பகல் 3 மணி வரையும் நடைபெறவுள்ளது.

அத்தோடு, 24 மணிநேரமும் அம்புலன்ஸ்வசதி சேவையில் ஈடுபடவுள்ளதால் தேவைப்படுவோர் 110 அல்லது 021 2264608 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

# இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற உதவுங்கள்

## நிஷா தேசாயிடம் சஜீவன் வலியுறுத்தல்



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலுடனான சந்திப்பில் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலை யாழ்.கிறீன் கிராஸ் ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டதாக வலி.வடக்கு பிரதேசசபையின் துணைத் தவிசாளர் எஸ்.சஜீவன் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு தொடர்பாக எஸ்.சஜீவன் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் வட பகுதியில் யுத்தத்திற்குப்பின்னர் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழ்மக்களின் பூர்வீக நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்பாகவும், நீண்டகாலமாக விசாரணைகள் இன்றி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் , யுத்தத்தின் பின்னர் வடக்கில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் தெரிவு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள உருத்திரபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகிய வற்றிற்கான புதிய நிர்வாகத் தெரிவு எதிர் வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தெரிவும், முற்பகல் 11.30க்கு மாதர் அபிவிருத்திச் சங்கத் தெரிவும் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு அப்பகுதி கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (செ-9-254)

# தேர்தல் பிரசாரங்களில் பாதாள உலக குழுக்கள்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் முக்கிய அரசியல்வாதிகளின் வெற்றிக்காக பிரசார நடவடிக்கைகளுக்கு உதவ பிரபல பாதாள உலக குழுக்கள் சில தயாராகி வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும் போது, வன்முறைகளில் ஈடுபட பாதாள உலக குழுக்களையோ, ஏனைய வன்முறை குழுக்களையோ தம்முடன் இணைத்து கொண்டுள்ளனர் என தகவல் கிடைத்தால் தகுதி தராதரம் பாராது அவர்களை கைது செய்யுமாறு மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த தேர்தல்களில் வன்முறைகளில் ஈடுபட்ட குண்டர்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு, அவர்களின் செயற்பாடுகள் குறித்தும் உன்னிப்பாக அவதானிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை தேர்தலில் பிரசாரங்களில் பாதாள உலக வன்முறையாளர்களை சம்பந்தப்படுத்திக் கொள்ள வேண்டாம் என பொலிஸார் வேட்பாளர்களிடம் கேட்டுள்ளனர்.

கிடைத்துள்ள தகவல்களின் படி மினுவங்கொட, மாளிகாவத்தை, ராஜகிரிய, கொலன்னாவ, காலி, மாத்தறை போன்ற இடங்களில் செயற்பட்டு வரும் பாதாள உலக குழுக்கள் தேர்தலில் பல்வேறு கட்சிகளுக்கு உதவ தயாராகி வருவதாக கூறப்படுகிறது. (செ-2)

# சர்வதேச இளைஞர் மாநாட்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச இளைஞர் மாநாட்டுக்கான விண்ணப்பங்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கோரப்பட்டுள்ளன.

உள்நாடு மற்றும் வெளிநாடு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் ஆயிரம் இளைஞர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்வர் என எதிர்பார்ப்பதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் குறிப்பிட்டுள்ளது.

இம் மாநாடு எதிர்வரும் மே 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மாநாட்டில் பங்குபற்றுவதற்கு நாட்டிலுள்ள இளைஞர்களிடமிருந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் விண்ணப்பங்களை கோரியுள்ளன.

18 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட இளைஞர் செயற்பாட்டாளர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பெப்ரவரி 21ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை www.wcy2014.com என்ற இணையத்தளத்தில் பெற முடியும்.

இதேவேளை, சர்வதேச இளைஞர் மாநாட்டுக்கான இலச்சினை வெளியிடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் ஊடகதுறை அமைச்சின் செயலாளர சரித்த ஹேரத், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியும் பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (செ-2)

சுதுமலை
அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய
12-ம் திருவிழா உபயகாரர்களின் இணையம்

ராஜகோபுரம் பாவைகள் பழுது பார்த்தலும் வர்ணம் தீட்டுதலும்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய இர்ாஜகோபுரம் வர்ணம் தீட்டுதலுக்கும், பாவைகள் பழுதுபார்த்தலுக்குமான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பங்க்ள் யாவும் 18-02-2014 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் 12ஆம் திருவிழா உப்யகாரர்களின் இணையத்தின் செயலருடன் நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளவும்.

நன்றி

தலைவர் / செயலாளர்
12ஆம் திருவிழா
உபயகாரர்களின் இணையம்
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தொலைபேசி :
077 400 2951,
077 055 8987
தொடர்பு :
குபேரன் எலக்ரிக்கல்.

(5507)

# சட்டவிரோத மணல் அகழ்வு

## 8 பேர் கைது; உபகரணம் பறிமுதல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை - பொன்னகர் பிரதேசத்தில் ஆற்று மணல் அகழ்வில் ஈடுபட்ட எட்டு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

மண் அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் இல்லாமையினாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும் இவர்கள் அனைவரும் பொலிஸ் பிணையில் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டதுடன் மணல் அகழ்விற்காகப் பயன்படுத்திய இரு உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பிணையில் விடுதலை செய்யப்பட்ட எட்டு பேரும் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-4)

# தேர்தல் வன்முறையாக 40 முறைப்பாடுகள்

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாணசபை தேர்தல் வன்முறை தொடர்பில் இதுவரை 40 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேல் மாகாணசபை தேர்தல் வன்முறை தொடர்பில் 28 முறைப்பாடுகளும் தென் மாகாணசபை தேர்தல் வன்முறை தொடர்பில் 12 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரச வாகனங்கள், அரச உடைமைகள் பயன்படுத்துதல், அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் ஈடுபடல் மற்றும் சட்டவிரோதமான முறையில் பதாகைகளை விநியோகித்தல் தொடர்பில் இந்த முறைப்பாடுகள் அமையப்பெற்றுள்ளன.

இதேவேளை அரச ஊழியர்கள் இடமாற்றம் தொடர்பிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (செ-2)

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்டப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் விளையாட்டுக் கழகத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பெருந்தலைவர் காமராசர்

தஞ்சாவூர் ஜில்லாவிலே ஓர் ஏழை அரசியல் தொண்டர் சென்னைக்கு வந்தார்.

அவர்கள் கட்சித் தலைவர் அப்போது முதலமைச்சராக இருந்தார்.

இவர் போய் அவர் முன்னாடி நின்றார்.

"என்ன விடயம்?" என்று கேட்டார் அவர்.

"என் மகளுக்கு திருமணம்! அதிலே நீங்கள் வந்து கலந்து கொள்ளவேண்டும்!" என்று கேட்டுக்கொண்டார் இவர். "திருமணத்திலே வந்து கலந்துகொள்வதற்கெல்லாம் இப்போது எனக்கு நேரமில்லை!" என்று கூறிவிட்டார் தலைவர்.

தொண்டருக்கு மிகவும் வருத்தமாகப் போய் விட்டது. தலைவரிடம் நாம் எவ்வளவோ நெருங்கிப்பழகியிருக்கின்றோம். அவர் வந்திருந்து திருமணத்தை நடத்தினால் நமக்கு எவ்வளவு கௌரவமாக இருக்கும். ஆனால் தலைவர் இப்படிக் கூறிவிட்டாரே! என்று நினைத்து அவர் மிகவும் கவலைப்பட்டார். இருந்தாலும் தலைவர் அப்படிக் கூறியதற்கு பின்னர் என்ன செய்ய முடியும்? பேசாமலே ஊருக்கு திரும்பிப் போனார்.

மிகவும் எளிமையாக திருமணத்தை நடத்தினார். திருமணம் நடந்து கொண்டிருக்கிறது. அப்போது ஓர் அதிசயம் நடந்தது! என்ன தெரியுமா?

திருமணத்திற்கு வர நேரமில்லை என்று கூறிய தலைவர் சரியான நேரத்திற்கு வந்து பந்தலிலே நுழைந்தார். தலைவர் வருவாரென்று யாரும் கற்பனைகூட செய்யவில்லை... இவரைப் பார்த்ததும் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஓடி வந்தார்கள். வரவேற்றார்கள். அழைத்துக்கொண்டு போய் உட்கார வைத்தார்கள். உட்காருவதற்கு நாற்காலி கூட இல்லை. பரவாயில்லை என்று கூறி பேசாமல் தரையிலே உட்கார்ந்தார்.

தொண்டர் மிகவும் பணிவாக அவரிடம் போனார். "என்னிடம் வரநேரமில்லை என்று கூறிவிட்டு இப்போது இப்படிக் கூறாமலே திடீரென்று வந்துவிட்டீர்களே!" என்றார். தலைவர் நிமிர்ந்து அந்த தொண்டரைப் பார்த்தார்.

"நீ... என்னைக் கூப்பிடவே இந்தத் திருமணத்திற்கு வர வேண்டும் என்று நான் முடிவு செய்துவிட்டேன். வேண்டும் என்று தான் 'வரமுடியாது' என்று கூறினேன். நான் வருவதாக கூறி இருந்தால் நீ ஆடம்பரமாக திருமண ஏற்பாடு செய்திருப்பாய்! அதற்காகத் தான் கூறாமலே இப்படி வந்தேன்" என்றார். இப்படிக் கூறிய அந்த முதல்வர் தான் பெருந்தலைவர் காமராசர்.

அவரும் தேர்தலிலே தோற்றுப் போனார். அப்போது பலர் அழுதுகொண்டே அவரிடம் போய் ஆறுதல் கூறினார்களாம்! "இதிலே வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது? இதுதான் ஜனநாயகம். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு!" என்று அதற்குச் சிரித்துக்கொண்டே பதில் கூறினாராம் காமராசர். அவர் ஒரு வித்தியாசமான மனிதர்–தலைவர்–முதல்வர்.

சேலத்திற்குப் பக்கத்திலே ஒரு கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. காமராசர் உரையாற்றிக்கொண்டிருக்கிறார். 'மைக்செட்' சரியாக வேலை செய்யவில்லை! அடிக்கடி 'கொர்' என்று சத்தம்! ஏகப்பட்ட தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தது. அதையெல்லாம் ஒரு வழியாக சமாளித்து பேசிக்கொண்டிருந்த காமராசர் ஒரு கட்டத்திலே...

"இந்த மைக்செட் காரரைச் சற்று மேடைக்கு வரச்சொல்லுங்கள்!" என்றார்.

எல்லோரும் பயந்து விட்டார்கள்... என்ன செய்யப்போறாரோ என்று!

அந்த 'மைக்செட்' வைத்திருந்தது ஒரு சிறிய பையன். அப்பதான் புதிதாக அந்த தொழிலை ஆரம்பித்திருக்கின்றார் போல இருக்கிறது. அந்தப் பையனைப் பிடித்துக் கொண்டு வந்து மேடையிலே நிறுத்தினார்கள்...

காமராசர் கூட்டத்தைப் பார்த்து "இதோ பாருங்கள்... இந்த ஊர்க்காரர்கள் யாரும் இனிமேல் இந்தப் பையனை 'மைக்செட்' அமைக்கக் கூப்பிடாதீர்கள்!" என்றுவிட்டார்! அவ்வளவு தான். அந்தப் பையனுக்கு அழுகையாக வந்து விட்டது. இனிமேல் யாரும் கூப்பிடவில்லை என்றால் என் தொழில் என்னத்திற்கு ஆகிறது என்கின்ற பயம் வேற வந்து விட்டது.

கூட்டம் முடிந்தது. எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்போது சிலபேர் காமராசரிடம் போய் நிற்கிறார்கள்.

"ஐயா! பாவம் அந்தப் பையன். மிகவும் வருத்தப்படுகிறான்! இனிமேல் இந்த ஊரிலே எனக்கு சந்தர்ப்பம் கிடைக்காது என்று அழுகிறான்!" என்றார்கள்.

"ஏன்?" என்று கேட்கிறார் காமராசர்.

"உங்கள் பேச்சைக் கேட்டதற்கு பின்பு இனிமேல் இந்த ஊரிலே யாரும் அவனை மைக்செட் வைக்க கூப்பிட மாட்டார்கள் என்று பயப்படுகிறான்!" என்றார்கள்.

இதைக் கேட்டதும் காமராசர் மிகவும் ஆச்சரியத்தோடு அவர்களைப் பார்த்து

"மக்கள் நம் பேச்சைக்கூட கேட்கிறார்களா?" என்றாராம்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மீனவ பேச்சுவார்த்தை முடிவுகளுக்கு விரைவில் செயல்வடிவம் தேவை

## அழுத்தம் கொடுக்கிறது பா.ம.க.

சென்னையில் இருதரப்பு மீனவர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இலங்கை அரசின் ஒப்புதலை விரைவாக பெற்று செயற்படுத்தும்படி மத்திய அரசிற்கு மாநில அரசு அரசியல் நெருக்கடி கொடுக்க வேண்டும் என பா.ம. க.நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வங்கக்கடலில் கச்சதீவு அருகே மீனபிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கொடூரத தாகுதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் மீனவர் ஒருவருக்கு சொந்தமான விசைப் படகு கடலில் மூழ்கிவிட்டது. அப்படகில் இருந்த 4 மீனவர்கள் கடலில் மூழ்கித் தவித்த நிலையில் அவர்களை மற்ற மீனவர்கள் காப்பாற்றியதால் உயிர் பிழைத்துள்ளனர். இதுதவிர 50இற்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீன்பிடி சாதனங்கள் சேதமடைந்து விட்டன. இந்த தாக்குதலில் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு 20 இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

கச்சதீவு அருகே நேற்று முன்தினமிரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட சில மணி நேரங்களில் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியை சேர்ந்த 8 மீனவர்களை இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து இலங்கைப் படையினர் பிடித்துச் சென்றுள்ளனர். தமிழக மீனவர்கள் மீதான இலங்கைப் படையின் தாக்குதலுக்கும், கைது நடவடிக்கைக்கும் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைப் படையினரின் செயற்பாடுகள் தொடர்கதையாகி விட்டன. மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இரு தரப்பு மீனவர்களும் கடந்த மாதம் 27 ஆம் திகதி சென்னையில் சந்தித்து பேச்சு நடத்தினர். அப்பேச்சுக்களில் வங்கக்கடலில் இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் பாதிப்பு இல்லாமல் மீன் பிடிப்பதற்கான பொதுத திட்டம் முன்வைக்கப்பட்டு அதை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டு விட்டனர். அந்தத் திட்டத்திற்கு இரு நாட்டு அரசுகளும் ஒப்புதல் அளித்த பிறகு அந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என மீனவர் அமைப்புகள் அறிவித்திருக்கின்றன.

இந்த நிலையில், பேச்சுவார்த்தை முடிவடைந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே தமிழக மீனவர்கள் இரு முறை கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு முறை தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. மீனவர்களிடையே சுமூகமான சூழல் உருவாகியுள்ள நிலையில், அதை சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்த தாக்குதல் மற்றும் கைதுகளை இலங்கைக் கடற்படையினர் நடத்தியிருப்பதாகத் தோன்றுகிறது.

இதேநிலை தொடர்ந்தால் இராமேஸ்வரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுவிடும். எனவே, முடிவின்றித் தொடரும் மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதொடர்பாக பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம் எழுதுவதும், ஆண்டுக்கு இத்தனை கடிதங்களை எழுதியதாக புள்ளி விவரங்களை வெளியிட்டு பெருமை பேசிக் கொள்வதும் எந்த வகையிலும் பயனளிக்காது.

மாறாக, சென்னையில் இருதரப்பு மீனவர்களிடையே நடைபெற்ற பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இலங்கை அரசின் ஒப்புதலை விரைவாக பெற்று செயற்படுத்தும்படி மத்திய அரசுக்கு மாநில அரசு அரசியல் நெருக்கடி தர வேண்டும். இதன் மூலம் மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு, வங்கக்கடலில் இருதரப்பு மீனவர்களும் நிம்மதியாக மீன்பிடிக்க வகை செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி, இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்கள் அனைவரையும் அவர்களின் படகுகளுடன் மீட்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என அதில் கூறியுள்ளார். (செ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 70 | 80 |
| தக்காளி | 40 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 35 | 30 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 40 | 70 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 80 |
| வாழைக்காய் | 20 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 110 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 90 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 40 |
| பயற்றங்காய் | 110 | 100 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 120 | 400 |
| போஞ்சி | 50 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 30 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 30 | 35-40 |
| இராசவள்ளி | 60 | 80 | 100 |

# இராசி பலன்

*03.02.2014*
*(தை 21, திங்கட்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*சதுர்த்தி முன்னிரவு 8.36 மணிவரை*
*பூரட்டாதி முற்பகல் 11.22 மணிவரை*
*இராகுகாலம் 8.05-9.35 மணிவரை*
*சுபநேரம் 12.35-2.05 மணிவரை*
*சதுர்த்தி விரதம்*

**மேடம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,தொழில்நலன் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் கூடும், பிதாசிந்தையுண்டு.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும், முயற்சிகள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, எதிர்பார்த்த தொகைகள் வந்துசேரலாம், உறவினர்களும் நண்பர்களும் உதவி செய்ய முன்வருவர்.

**கடகம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வார்த்தைகளில் நிதானம் தேவை, சிலர் கௌரவக்குறைவாக நடந்து கொள்ளலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், அபூர்வ சந்திப்புகள் இடம் பெறலாம், பயணத்தால் பலனுண்டு, செல்வாக்கான நாள், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்** செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், தேக நலனில் உற்சாகம் பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வியாபார மேன்மையுண்டு.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், புதிய தகவல்கள் வந்து சேரலாம், பயந்த சுபாவமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சிந்தனை மிகுதியான நாள்.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், வாக்கு மேன்மையுண்டு, செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்.

**மீனம்** சயன சுகமுண்டு, பொருளாதார நலன் கருதி வெளியூர் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமறைவாகியிருந்த நபர் 3 வருடங்களின் பின் கைதானார்

(கரணவாய்)


பருத்தித்துறை நீதிமன்றினால் பிடி விறாந்து விடுக்கப்பட்டு மூன்று வருடங்களாக தலை மறைவாகியிருந்த நபரொருவரை நெல்லியடிப் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர்.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை ஒன்றிற்கு சமுகம் அளிக்காமல் மூன்று வருடங்களாக தலைமறைவாகியிருந்ததனால் மன்று பிடி விறாந்து விடுத்திருந்தது.

இந்நிலையில் குறித்த நபர் கடந்த வாரம் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, நீதவான் சமுகம் தரும் வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதன்படி, குறித்த நபர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதவான் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை பிரஸ்தாப நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (செ-9-60)



நன்றி: அததெரண

# யாழ்.கட்டளைத் தளபதிக்கு கத்தி கொடுத்து நேபாள நாட்டு இராணுவத்தளபதி மகிழ்விப்பு

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவுக்கு நேபாள நாட்டின் கத்தியினைக் கொடுத்து மகிழ்வித்தார் அந்நாட்டு பிரதான இராணுவ தளபதி ஜெனரல் ஜங் பகதூர் ராணா.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பை வந்தடைந்த நேபாள நாட்டின் பிரதான இராணுவத் தளபதி மற்றும் அவரது துணைவியார் அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணத்திற்கும் நேற்று வருகை தந்தனர்.

கொழும்பிலிருந்து விசேட உலங்கு வானூர்தியில் பலாலி விமான நிலையத்தில் நேற்றுக் காலை 9.40 மணியளவில் வந்திறங்கிய இந்தக் குழுவினரை யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள் வரவேற்றனர்.

இராணுவத்தினரின் அணிவகுப்பு மரியாதையுடனும் சிங்கள பாரம்பரிய முறைப்படியும் பலாலி இராணுவப் படைத் தலைமையகத்தில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்ட நேபாள நாட்டு இராணுவத் தளபதி உள்ளிட்ட குழு வினர்களுக்கும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்குமிடையில் பலாலியில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.



சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பினையடுத்து நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியால் நேபாள நாட்டின் பிரதான இராணுவத் தளபதிக்கு அலங்கரிக்கப்பட்ட யானைச் சின்னம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து நேபாள நாட்டின் பிரதான இராணுவத் தளபதி யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கு கத்தி ஒன்றினை வழங்கினார்.

குறித்த கத்தியினைப் பெற்றுக் கொண்ட யாழ். மாவட்டகட்டளைத் தளபதி மிகுந்த மகிழ்ச்சியடைந் தார்.

இதேவேளை நேபாள நாட்டின் பிரதான இராணுவக் கட்டளைத் தளபதியுடன் வருகை தந்த இராணுவ உயரதிகாரிகளுக்கும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியால் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடனான சந்திப்பினையடுத்து நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்கு சென்ற நேபாள நாட்டின் இராணுவத் தளபதி உள்ளிட்ட குழுவினர் அங்கு விசேட வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து யாழ்.கோட்டைக்கும் யாழ். பொது நூலகத்துக்கும் சென்று பார்வையிட்டனர். இதனையடுத்து பலாலி விமான நிலையத்திற்கு சென்ற அவர்கள் உலங்கு வானூர்தியூடாக கொழும்பைச் சென்றடைந்தனர். (2-6)

# தனங்கிளப்பு சந்தியிலிருந்து இராணுவ முகாம் அகற்றப்பட்டது

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டு காணி சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு இம் முகாம் சாவகச்சேரி கேரதீவு வீதியில் தனங்கிளப்புச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் முன்னர் சோதனை முகாமாக காணப்பட்டு பின்னர் முகாமாக இயங்கி தற்போது முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

முகாம் அமைக்கப்பட்டிருந்த காணியில் உரிமையாளர்கள் நேற்று முன்தினம் குறித்த காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (செ-9-84)

# மயான காணி பிரச்சினை கைவிடப்பட்ட நிலையில்!

## தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை


கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட வேரூன்றி மயானம் தொடர்பான பிரேரணை கைவிடப்பட்டுள்ள நிலையில் தமக்கு தீர்வு பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி மயானத்தை துன்னாலை தெற்கு, மத்தி, கரவெட்டி மேற்கு போன்ற கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஒரு சாரார் பிரதேச சபையினரின் அனுமதியின்றி இம்மயான காணியை பங்காக பிரித்து பாதுகாப்பு வேலிகளை போட்டுள்ளனர்.

இவ்வாறாக ஒரு சாரார் மயான காணியில் வேலி கட்டியமையால் பிரதேசங்களுக்கிடையே பிளவு ஏற்படுமென பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் பிரதேச சபையினர் தீர்வைப் பெற்றுத் தருமாறு தெரிவித்ததையடுத்து பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு எவ்வித தீர்மானமும் நிறைவேற்றப்பட வில்லை.

எனவே வேரூன்றி மயானம் காணிபிரிவு தொடர்பில் பிரதேச மாகாண சபை உறுப்பினர்கள் தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-9-60)





யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய அதிபர் சி.மனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா மங்கல விளக்கேற்றுவதையும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மண் அகழ்விற்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

மன்னார் தீவு பகுதியில் மண் அகழ்வதை தடைசெய்யக்கோரி மன்னார் பேசாலை பகுதியில் நேற்றுக்காலை குறித்த பகுதி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பேசாலை பத்திமா ஆலயத்தில் இருந்து புறப்பட்டு பேசாலை பிரதான வீதிவரை ஊர்வலமாக சென்று குறித்த பகுதியில் உள்ள சந்தியில் வீதி இருமருங்கிலும் சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் தமது கோரிக்கைகளை தெளிவுபடுத்தும் வகையிலான சுலோகங்களை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த மண் அகழ்விற்கு எதிரான போராட்டம் 10 மணிவரை நடைபெற்றது.

இதன்போது குறித்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததோடு, குறித்த பகுதிக்கு வருகைதந்த தலை மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜமீல் குறித்த மக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இதன்போது குறித்த பகுதி மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இக் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொண்ட பொலிஸ் அதிகாரி குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததோடு, மன்னார் தீவு பகுதியில் எடுக்கப்படும் மண் தீவிற்கு வெளியில் கொண்டு செல்லாத வகையில் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

எனினும் குறித்த மண் அகழ்விற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பின் குறித்த அனுமதியினை நீதிமன்றத்தின் ஊடாகவே நிறுத்த முடியும் எனவும் அவ்வாறு இருப்பின் நீதிமன்றத்தை அனுகும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் பொலிஸ் அதிகாரி உடனான பேச்சு திருப்தி அளித்த நிலையில் குறித்த ஆர்ப்பாட்டம் 10 மணியளவில் நிறைவுற்றது.

மன்னார் தீவு பகுதியில் மண் அகழ்வு பரவலாக நடைபெற்று வருகிறது.

இந் நிலையில் இது தொடர்பாக தீவு பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்த போதிலும் இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை

இந்நிலையிலேயே நேற்று குறித்த ஆர்ப்பாட்டம் பேசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக பேசாலையில் கடற்கரையை அண்மித்த பகுதியில் மண் திட்டிகள் காணப்படுகின்றன.

இம் மண் திட்டிகள் அகழ்வு செய்யப்பட்டு வருகிறது.

இதனால் எதிர் காலத்தில் குறித்த பகுதியில் நிலத்திற் கடியிலுள்ள நீர் உவர் நீராகுவதற்கு சந்தர்ப்பம் இருப்பது மட்டுமல்லாமல் சூழல் பாதிப்புகளும் இடம் பெறுவதற்கு இது ஏதுவாக அமையும் எனற வகையில் குறித்த மண் அகழ்வு செய்வதை உடன் நிறுத்துமாறு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது குறிப் பிடத்தக்கது.

இதேவேளை இப் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (செ-2)

## நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

யாழ்.கந்தர் மடம் சிவ உதய நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதில் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு வேட்டைத் திருவிழா நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத்திருவிழா இடம்பெறும். எதிர் வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும். எதிர் வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு தீக்குளிப்பும் இடம்பெறும். (2)


சின்மயா மிஷன்– யாழ்ப்பாணம்

"அன்பின் ஆற்றல்"

(ஆன்மீக அருளுரை)

இந்தியா சேலத்தில் இருந்து வருகை தரும்

சுவாமி கிருஸ்ணாத்மானந்தா

காலம்–06,07,08,09 மாசி 2014

நேரம்–பி.ப. 6.00–7.30

இடம்– இல. 09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்

புதிய மண்டபம் 06–02–2014 மாலை 4 மணிக்கு சுவாமி கிருஸ்ணாத்மானந்தா அவர்களால் திறந்து வைக்கப்படும்.

அன்புடன் அழைக்கின்றோம்! அனுமதி இலவசம்!!

சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.

தொலை.இல. 0212223447 (இ)


# கடன் வழங்கும் நிறுவனங்களால் நாட்டில் தற்கொலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடன் தொல்லையால் தற் கொலை செய்து கொள்வோரின் வீதம் அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சுனாமிக்குப் பின்னர் பல நிறுவனங்கள் அங்கு வந்து உள்ளூர் சமூக நிறுவனங்கள் பலவற்றுக்கு நிதி வழங்கி விட்டுச் சென்றிருந்தன.

அத்தோடு சமீப காலமாக வகை தொகையற்ற லீசிங் கம்பனிகளும் இப்பகுதிகளில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

தனியார் கடன் வழங்கும் நிறுவனங்கள் அப்பாவி மக்களிடம் பல இடங்களில் கையெழுத்துக்களை வாங்கிவிட்டு 50 ஆயிரம், ஒரு இலட்சம், 20 ஆயிரம் ரூபாய் என அதிக வட்டிக்கு பணம் வழங்கி வசூலிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

குறித்த நிதி நிறுவனங்கள் கையெழுத்துப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஆங்கிலத்தில் இருப்பதினால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியாமல் பலரும் பணம் கிடைத்தால் போதும் என கையெழுத்துப் போட்டு விடுகின்றனர்.

இந் நிலையில் பணம் கொடுக்கும் நிறுவனங்கள் அதனை வட்டியுடன் சேர்த்து தவணை அடிப்படையில் அறவீடும் செய்து வருகின்றன.

தமது வீட்டுக் கஷ்டத்திற்காக பணம் பெற்றுக்கொண்ட பலர் தவணை அடிப்படையில் அதிக வட்டி செலுத்தி பணம் கட்ட முடியாத நிலைக்கு தள்ளப்படும் நிலையில் பணம் கொடுத்த நிறுவனம் தொலைபேசி மூலமும் நேரிலும் மக்களை அச்சுறுத்தி பணத்தை அறவீடு செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ள பத்திரத்தை வைத்து எடுத்த கடனுக்காக உங்கள் வீட்டை பறிமுதல் செய்யவுள்ளோம் என கூறுவதினால் சிலர் மன உளைச்சலுக்குள்ளாகி தற்கொலை செய்து கொள்கின்றனர்.


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2012 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 22.02.2014ல் இருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(C-6406)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா:8
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: NDT Civil Engineering / RTO (சிங்கப்பூர்)
தொ.இ: B/2720

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 35 ¼ செவ் 2 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bachelor of Engineering, Master of Engineering, Charted Engineering (Following) / Civil Engineer
தொ.இ: B/2798

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 12
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L / வியாபாரம், நாணயம் மாற்றுதல்
தொ.இ: B/2800

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 53
உயரம்: 5'10"
தகைமை/தொழில் பட்டதாரி/ முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: B/995

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1964 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 8 ¾ சூரி செவ் 3 ல்
உயரம்: 5'3"தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: மறுமணம் பரிசீலிக்கப்படும்
தொ.இ: G/1439


பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 30 உயரம்: 5'
தகைமை/தொழில்: O/Lஎதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/1441

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 72 செவ் 8 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1444

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 52 ¼ செவ் 1 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, HND / பகுதி நேர ஆசிரியர்
தொ.இ: G/1449

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2 ஆவது இளைஞர் மாநாடு நேற்றைய தினம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் உட்பட ஏனையோர் அமர்ந்திருப்பதையும் பிரதேசத்தின் பிரபல்யமான இளைஞருக்கான விருதை பிரதம விருந்தினர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சண்டிலிப்பாய் பிரதேச் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தனுக்கு வழங்குவதையும் இடம்பெற்ற கலைநிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# தனியார் கல்வி முக்கியத்துவம் பெற சரியான வழிகாட்டல் இன்மையே காரணம்

## கல்வியமைச்சர் குருகுலராஜா தெரிவிப்பு

(மானிப்பாய்)

தற்போதுள்ள மாணவர்கள் பாடசாலைக் கல்வியை நாடுவதை விட தனியார் கல்வியையே அதிகம் நாடுகின்றமைக்கு காரணம் சரியான முறையில் அவர்களுக்கு வழிகாட்டல் இல்லாமை என வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் வடமாகாண பாடசாலைகளில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற இருபது சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்வி அமைச்சில் இடம்பெற்ற போது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த சாதனைகள் யாவும் மாணவர்களை சேர்வதுடன் அவர்களை பெரிதும் ஊக்குவித்த பெற்றோர்கள் பாடசாலை ஆசிரியர்களின் பங்களிப்பே அவர்களை வெற்றி பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது.

மேலும் வடக்கில் கல்வி பாரிய பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. வடக்கின் கஷ்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் குறிப்பாக மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட தேசிய பாடசாலைகளில் கூட ஆசிரியர் பற் றாக்குறை நிலவுகிறது.

இதனால் அந்த பாடசாலைகள் கல்வியில் பின்னடைவை எதிர்நோகியுள்ளன. ஆனால யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் வளம் அதிகம் காணப்படுகிறது.

அவர்களை தூர இடங்களுக்கு ஆசிரியராக நியமிக்க தீர்மானம் எடுக்க முனைந்தால் ஆசிரியர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

எனவே யாரும் கஷ்டப் பிரதேசங்களுக்குச் செல்ல முன்வருவதில்லை. எப்போது அவர்களிடையே மனமாற்றம் ஏற்படுகின்றதோ அப்போது தான் வடக்கின் கல்விப் பயணமும் இடை நிற்காது தொடரும்.

இதற்கு ஆசிரியர்களின் பங்களிபபு மிக மிக அவசியமானது. அத்தோடு மாணவர்கள் சரியான வழிகாட்டல் இன்மையால்தான் தனியார் கல்வியை அதிகம் நாடுகின்றனர். ஆகவே வடக்கின் கல்விப் பயணம் தொடர்ந்து சமுதாயம் மிளிர வேண்டுமாயின் மாணவர்களுக்கு சரியான விதத்தில் வழிகாட்டல்கள் அமைய வேண்டும்.

இவ்வாறாக கல்வி செல்லுமாயின் வடக்கின் கல்வியின் எதிர்காலம் நன்றாக மிளிரும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை என்றார்.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், வடமாகாண கல்வி பணிப்பாளர் செல்வராசா, வடமாகாண போக்குவரத்து கடற்தொழில் அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதம பொறியியலாளர் குகநேசன், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், எனப் பலர கலந்து கொண்டனர்.

(செ-9-23)

# எல்லை தாண்டினால் மீன்பிடி உரிமம் இரத்து; புதுவை அரசின் அறிவிப்பு நியாயமா?

## கேட்கிறார் ராசா

மூன்றாவது முறை கடல் எல்லையைத் தாண்டினால் மீன்பிடி உரிமம இரத்து செய்யப்படும் என்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இது நயாயமா? தேர்தலில் அறிவித்த வாக்குறுதிகளை புதுவை அரசு நிறை வேற்றவில்லைஎன முன்னாள் மத்திய அமைச்சர் ராசா தெரிவித் துள்ளார்.

புதுவை மாநில தி.மு.க. சார்பில் திருச்சி மாநாடு விளக்க பொதுக் கூட்டம் கடலூர் வீதி சிங்காரவேலர் சிலை அருகில் நடந்தது. இக் கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் ராசா பேசியதாவது,

தமிழர்கள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்பட்ட இயக்கம் தி.மு.க. இனம், மொழியை காக்கும் தமிழின தலைவர் கருணாநிதிதான்.

புதுவையில் தி.மு.க. ஆட்சி செய்து 14 ஆண்டுகள் ஆகிறது. ராமர் 14 ஆண்டுகள காட்டுக்கு சென்று திரும்பியது போல் புதுவையில் மீண்டும் தி.மு.க. ஆட்சி வரும். ஒரே நேரத்தில் தமிழகம புதுவையில் தி.மு.க. ஆட்சி வர உள்ளது.

இந்திய அரசியல் எங்கே செல்கிறது என்பதற்காகத் தான் திருச்சி மாநாடு. வருகிற பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ், பாரதீய ஜனதா ஆகிய 2 கட்சிகளுடனும் கூட்டணி இல்லை. தி.மு.க. தனித்தே போட்டியிடும்.

கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு எல்லை தெரியாது. ஆனால புதுவையில் கடல் எல் லையை ஒரு முறை தாண்டினால் ரூ.5 ஆயிரம். 2ஆவது முறை தாண் டினால் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

மூன்றாவது முறை கடல் எல்லையை தாண்டினால் மீன் பிடி உரிமம் இரத்து செய்யப்படும் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இது நியாயமா? தேர்தலில் அறிவத்த வாக்குறுதிகளை புதுவை அரசு நிறைவேற்றவில்லை. (செ-2)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை அவர்களிடமே வழங்குமாறு கோரிக்கை

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை நேரடியாக முன்பள்ளி ஆசிரியர்களிடமே வழங்குமாறு சண்டிலிப்பாய் கோட்டத்தை சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வட மாகாண சபையினூடாக ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியருக்கும் மாதாந்த கொடுப்பனவாக 3ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

இக் கொடுப்பனவு நேரடியாக முன்பள்ளி ஆசிரியர்களிடம் வழங்கப்படாது குறித்த முன்பள்ளிகளின் முகாமைத்துவக் குழுவிடமே வழங்கபபட்டு பின்னர் அவர்களூடாகவே ஆசிரியர்களிடம் கையளிக்கப்படுகின்றது.

எனினும் சில முன்பள்ளிகளின் முகாமைத்துவக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இக் கொடுப்பனவை ஆசிரியர்களிடம் கையளிப்பதில் காலம் தாழ்த்துவதுடன் பின்னடித்தும் வருகின்றனர்.

சிலர் அப் பணத்தை தமது சொந்த தேவைக்காக பயன்படுத்தியும் வருகின் றனர். உரிய காலத்தில் மாகாண சபையால் நிதி வழங்கப்படும் போதும் முன்பள்ளிகளின் முகாமைத்துவக் குழுக்களைச் சேர்ந்தவர்களால் உரிய காலத்தில் அவை ஆசிரியர்களிடம் கையளிக்காமல் கொடுப்பனவுகளினை உடன் வழங்காது இழுத்தடிக்கின்றனர்.

சிலர் இதனை சாதகமாக பயனபடுத்தி தமது சொந்த வேலைகளை இம் முன்பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு செய்விக்கின்றனர். முன்பள்ளிகளின் முகாமைத்துவக் குழுக்களினூடாகவே கொடுப்பனவுகள் வருவதால் அவர்களுக்கு அஞ்சி பலர் இத் தகவல்களை வெளிக் கொணராத போது இப் பிரச்சினை தீவிரமடைந்துள்ள நிலையில் அவர்களால் இது பற்றி முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ந.பத்மராஜ இடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இது குறித்தான முறைப்பாடுகள தனக்கும் கிடைத்துள்ளதாகவும் இது குறித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளீதரனுக்கும், வடமாகாணக் கல்வித் திணைகளத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப் பிரச்சினைகுடாநாடு முழுவதிலும் உள்ளமையினால் இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.


(செ-9-23)

# ஈழத்தமிழர்களுக்கு உரிமை கிடைக்க பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(தஞ்சாவூர்)

இலங்கை மற்றும் தமிழகத்தில் வாழும் ஈழத்தமிழர்களின் முழு உரிமை பெறுவதற்கு உலகநாடுகளில் வாழும ஈழத்தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி அவர்கள் அளிக்கும் தீர்ப்பை ஐ.நா. சபை நடவடிக்கையெடுக்க வேண்டுமென உலகத்தமிழர் பேரமைப்பின் தலை வர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.



தஞ்சை விளார் சாலை அருகே முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் தமிழ் அமைப்புகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் முடிவுற்ற பின்பு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இலங்கை மற்றும் தமிழகத்தில் வாழும் ஈழத் தமிழர்களின் முழு உரிமை பெறுவதற்கு உலக நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி அவர்கள் அளிக்கும் தீர்ப்பை ஐ.நா. சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் ஈழத் தமிழர்களைத் திட்டமிட்டு படுகொலை செய்த இலங்கை அரசு மீது விசாரணை நடத்தி தற்சார்பு பன்னாட்டு புலனாய்வு ஆணையத்தை அமைக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 20ஆம் திகதி மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

(2)

# பொதுக்கூட்டம்

ஊர்காவற்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் இவ் வருடத்திற்கான பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ரம்மியராகுலன் தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேசத்திற்குட்பட்ட ஒவ்வொரு இளைஞர் கழகங்களினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர், உப தலைவர், உப செயலாளர் ஆகியோரை தவறாது சமூகம் தருமாறு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

(செ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

பாணந்துறை பிரதேசத்தில் நீண்ட காலமாக ஹெரோயின் போதைப் பொருளை விநியோகித்து வந்த ஒருவர் சுமார் ஒரு கிலோ கிராம் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை தலைமையக பொலிஸாரினால் சந்தேக நபர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார். முச்சக்கர வண்டி ஒன்றில் போதைப் பொருள் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

முச்சக்கர வண்டியை கண்டறிந்து பொலிஸார் அதனை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளனர். எனினும் வண்டியை நிறுத்தாத சந்தேக நபர் வண்டியை வேகமாக செலுத்தியுள்ளார்.

வண்டியை பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் ஹொரணை வீதியின் அலுபோமுல்ல பிரதேசத்தில் வைத்து முச்சக்கரவண்டியின் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து , சந்தேக நபரை கைது செய்ததுடன் போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரிடம் 8 ஆயிரம் சிறிய பொதிகளாக பொதி செய்யப்பட்ட சுமார் ஒரு கிலோ கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் பாணந்துறை மோதரவில பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் கொழும்பு பொறளையில் போதைப் பொருளை கொள்வனவு செய்து பாணந்துறையில் விநியோகம் செய்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர். (செ-2)

# வடக்கில் சிங்களவர்கள் குடியேறுவதை அமெரிக்காவோ, விக்கியோ தடுக்கமுடியாது

## ஆர்ப்பரிக்கிறார் அமைச்சர் விமல்



(கொழும்பு)

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும், வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்டோரும் வடக்கில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை குடியேற்றுவதை நிறுத்துமாறு கூறியுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் இடம்பெற்றது. அப்போது வாழ்ந்த தமிழர்களை மட்டுமே கொழும்பில் குடியேற்ற வேண்டும் என்ற யோசனையை மேல் மாகாணத்தில் உள்ள எந்த சிங்கள அரசியல்வாதியும் கொண்டு வரவில்லை.

83 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை காரணமாக கொழும்பில் இருந்த தமிழர்கள் கொழும்பைவிட்டு செல்ல வேண்டிய நிலைமை உருவாகியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றது. பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் விடுமுறையை வழங்கி, தமது குண்டர்களை பயன்படுத்தி தமிழர்களின் சொத்துக்களை கொள்ளையிடுவதற்காக மக்களை தூண்டிவிட்டு கறுப்பு ஜூலை என்ற பாரிய அனர்த்தம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டது.

கொழும்பில் அன்று வாழ்ந்த பெருந்தொகையான மக்கள் கொழும்பை விட்டு வெளியேறினர். 83 ஆம் ஆண்டு கொழும்பில் வாழ்ந்த எண்ணிக்கையிலான தமிழர்களே இங்கு வாழ வேண்டும் என எந்த அரசியல் கட்சியை சேர்ந்த சிங்கள அரசியல்வாதிகளும் கூறவில்லை.

எனினும் வடக்கு மாகாண சபை 80 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் பிரகாரமே வடக்கில் சிங்கள மற்றும முஸ்லிம் மக்கள் இருக்க வேண்டும் எனக் கூறுகின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வடக்கில் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த அனுமதிக்கவில்லை. இதனால் அங்கிருந்த மக்கள் தொகை என்ன என்பது தெரியாது.

வடக்கில் தமிழர்கள் மட்டுமே இருக்க வேண்டும் வேறு எவரையும் குடியேற்ற கூடாது என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்டோரும் கூறுகின்றனர்.

சிங்களவர்களை குடியேற்றவே முடியாது. முஸ்லிம் மக்கள் இருந்த எண்ணிகையை தவிர அதிகளவில் குடியேற்ற முடியாது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

வடக்கில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் குடியேற்றப்படுவதை அமெரிக்கா உள்ளிட்ட எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

இலங்கையில் அமைதி ஏற்படுவதை விரும்பாத பல சக்திகள் உள்ளன. இந்திய வம்சாவளியான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு வந்துள்ளார்.

அவர் எதிர்க்கட்சித் தலைவர் , அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரை சந்தித்துவிட்டு, வடக்கு மாகாண முதலமைச்சரை சந்திக்க யாழ்ப்பாணத்திற்கு சென்றார். விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தாலும் அவர் கொழும்பைச் சேர்ந்தவர்.

வடக்கு மக்களின் மீதான உண்மையான் கரிசனையிலா பிஸ்வால் அங்கு செல்கிறார்?. மக்கள் இன்று பேதங்களை மறநது ஐக்கியமாக முன்னோக்கி செல்கின்றனர். அதனை சீர்குலைக்கவே இவர்கள் இங்கு வருகின்றனர்.

வடக்கில் போர் நடைபெற்ற காலத்தில் அங்கு மக்கள் துன்பத்தை அனுபவித்த போது அமெரிக்காவின் எந்தப் பிரதிநிதியும் அங்கு செல்லவில்லை என்றார். (செ-2)







வடமாகாண பண்பாட்டுத் திணைக்களத்தினரால் இவ்வாண்டு முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று வடமாகாண கல்வி அமைச்சின் கோட்போர் கூடத்தில் அண்மையில் இடம் பெற்றது. கலந்துரையாடல் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறுவதையும் அருகில் பண்பாட்டு திணைக்கள உதவிப்பணிப்பாளர் உஷா சுபலிங்கம் அமர்ந்திருப்பதையும் கலந்து `கொண்ட கலாசார உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

## புல்மோட்டை மீனவர்களுடன் அமைச்சர் ஹக்கீம் பேச்சு

புல்மோட்டை மீனவர்கள் கடந்த நான்கு நாட்களாக சத்தியாக்கிரக போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் நேரில் சென்று இந்த மீனவர்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளாா.

புல்மோட்டை கொக்கிளாய் கடலேரியில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு அவர்கள் பாவிக்கும் வலையை பயன்படுத்தக் கூடாதென மீனபிடி திணைக்களம் தடை விதித்ததை எதிர்த்தே இந்த சத்தியாக்கிரப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. வெளியிடங்களில் இருந்து வரும் மீனவர்கள் இந்த ரக வலை பாவித்து தொழில் செய்து வருவதாக. இம் மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்த மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக அந்த இடத்திலிருந்தே மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரட்னவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அமைச்சர் ராஜித சேனாரட்ன கொழும்பில் இது குறித்து விரிவாக பேசலாம் என அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளார்.

மீனவர்களிடம் இது குறித்துப் பேசிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீன்பிடி அமைச்சருடன் இது குறித்து பேசி தீர்வு எட்டப்படாவிட்டால் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். (செ-2)

## முத்துமாரி அம்மன் மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம் கோண்டாவில் அருள் மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மணவாளக் கோல அஷ்டோத்திர சத (108)சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மாலை 3 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஸ்ரீமுத்துமாரி அம்மன் திருவூஞ்சல் அனந்த சக்தியுடன் திருவலம் வரும் காட்சி இடம் பெறும். (செ-2)

## சத்தியாக்கிரக மேடையை அகற்ற நீதிமன்றம் உத்தரவு

பேராதனை பல்கலைக்கழக இணைந்த சுகாதார கல்விப்பீட மாணவர்கள் சத்தியாக்கிரகம் இருந்து வரும் மேடையை இன்றைய தினத்திற்குள் அப்புறப்படுத்துமாறு கண்டி நீதிமன்ற நீதவான் ஏ.எம்.வசந்தகுமார உத்தரவிட்டுள்ளார்.

இம் மாணவர்களின் சத்தியாக்கிரக போராட்டம் பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதாக பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோனின் ஆலோசனையின் பேரில் பேராதனை பொலிஸார் அம்மேடையை அகற்ற நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருந்தனர்.

இது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இப்போராட்டம் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக பொதுமக்களில மூவர் சாட்சியமளித்தனர். இதேபோன்று சில பொலிஸாரும் சாட்சியமளித்தனர்.

இவற்றை ஆராய்ந்த நீதவான் மாணவர்களின் போராட்ட மேடையை இன்று திங்கட்கிழமைக்குள் அகற்ற வேண்டும் எனவும் தவறும் பட்சத் தில் அன்றைய தினம் நள்ளிரவிற்குள் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (2)

## இலங்கை சர்வாதிகார நாடு

### உறுதிப்படுத்தப்படுகிறது என்கிறார் மங்கள



இலங்கை சர்வாதிகாரத்தை நோக்கி பயணித்து விட்டது எனவும் பெயரளவில் மாத்திரமே இலங்கை ஜனநாயக நாடு எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை ஜனநாயக நாடு என்பது பெயரளவிலானது. இந்தோனேசியாவின் சுகார்டோ, எகிப்தின் முபாரக் ஆகியோரின் ஆட்சியில் காணப்பட்ட சகல சர்வாதிகார அடையாளங்களும் இலங்கையில் தற்போது உள்ளன.

மாதம் தோறும் தேர்தல் நடத்துவதால் ஒரு நாடு ஜனநாயக நாடாகி விடாது. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் காணப்படும் நவீன சர்வாதிகாரத்தின் அடையாளமாகவே தேர்தல் காணப்படுகிறது.

முபாரக் எகிப்தில் தொடர்ந்தும் தேர்தல்களை நடத்தினார். சிம்பாவே ஜனாதிபதி றொபர்ட் முகாபே தொடர்ந்தும் தேர்தலை நடத்தியே தெரிவு செய்யப்படுகிறார்.

ஊடக சுதந்திரம், மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, பொருளாதார கொடுக்கல் வாங்கல்கள், வினைத்திறன், சுதந்திரமான தீர்மானங்களை எடுக்க நாடாளுமன்றத்திற்கு இருக்கும் இயலுமை ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்தால், இலங்கை ஜனநாயக நாடு அல்ல, சர்வாதிகார நாடு என்பது புலனாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்வம் வேண்டாமா?



...ஒருநாள் அவளை மணதார விரும்பிய சோமு அவளைத் தேடி ஆசிரமத்திற்கே வந்துவிட்டான். தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி மீண்டும் அவளை வற்புறுத்தினான். அதற்கு அவள், "ஆனந்தனை நீ கொன்றுவிட்டால. அந்தப் புதையலை நாம் எடுத்துக் கொண்டு திருமணம் புரிந்து மகிழ்ச்சியுடன் இருப்போம்" என்றாள்.

நீலாம்பரி பேசியதை ஆற்றில் நீராடச் சென்று திரும்பிய ஆனந்தன் கேட்டு திடுக்கிட்டான். உடனே அவள் முன் வந்து, "பணத்திற்காக உனக்குப் புகலிடம் தந்த என்னையே நீ கொல்ல எண்ணினாய்! அதனால நீ ராட்சஸியாக மாறுவாய்" என்று சாபம் கொடுக்க, நீலாம்பரி ராட்சஸியாக மாறிவிட்டாள்.

அப்போது அங்கே வந்த பிரகாண்ட ரிஷி ஆனந்தனைப் பார்த்து, 'நீலாம்பரிக்கு சாபம் கொடுத்ததனால உன் தவவலிமையை நீ இழந்து விட்டாய்!" என்றார்..

"சுவாமி! மனித குலத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டேன். என்னை உடனே சந்நியாசியாக மாற்றுங்கள்" என்று ஆனந்தன் வேண்டினான.

"சரவணனுக்கு நீ கொடுத்த வாக்கு என்னாவது? உனக்குப் பதிலாக வேறு யாரையாவது அவனிடம் வேலைக்கு அமர்த்து! உன்னால் சாபமிடப்பட்ட நீலாம்பரிக்கு சாப விமோசனம் அளி! அதன்பிறகு சந்நியாசத்தைப் பற்றி யோசிக்கலாம்" என்றார் ரிஷி.

"நீங்கள் எனக்குச் சற்று உதவி செய்யக்கூடாதா?" என்று ஆனந்தன வேண்ட, அவர் "பணத்தின் மீதுள்ள ஆசையினால் தானே நீலாம்பரி உன்னைக் கொலை செய்யவும் துணிந்தாள்.' அதே பணத்தை துச்சமாகக் கருதி எவன் ஒருவன் தியாகம் செய்கிறானோ, அவன் மூலம் நீலாம்பரிக்கு விமோசனம் அடைய, உன்னுடைய கடமையும் முழுமையடையும்" என்றார்.

மேற்கூறிய தன் வரலாற்றை விளக்கியபின், ராமநாதனை சரவணனிடம் அழைத்துச் செல்லவே தான் வந்ததாக ஆனந்தன் கூறினான. இதைக் கேட்டதும் ராமநாதன் மிகுந்த உற்சாகத்துடன் சரவணனிடம் வேலைக்கு அமர்ந்தான். பிறகு தான் அவனுக்கு அந்த வீட்டில் வேலை செய்வது எத்தனை கடினம என்று புரிந்தது.

ஒருநாள், எஜமானி "இந்த கிராமத்தில் சந்திரா என்ற சமையற்காரி ஒருத்தி இருக்கிறாள். அவள் மிகப் பிரமாதமாக சமைப்பாள். அவளை எப்படியாவது இங்கு சமையல் செய்ய அழைத்துவா! முடியவில்லையெனில் உன்னை வேலையை விட்டு நீக்கிவடுவேன்" என்று பயமுறுத்தினாள்.



ஆனால், சந்திரா மறுத்துவிட்டாள். ராமநாதன் விடாமல், "ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு எனக்கு ஆயிரம் பொன் கிடைக்கும். அதை உன்னோடு பகிர்ந்து கொள்வேன். தயவுசெய்து எனக்கு உதவி செய்!" என்று கெஞ்சினான். அவனைக் கண்டு இரக்கமுற்ற சந்திரா, "எனக்கு உன்னுடைய பணம்தேவையில்லை. உன்னுடைய நிலைமை பரிதாபமாக இருப்பதால் உனக்கு உதவி செய்ய ஒத்துக் கொள்கிறேன்" என்று கூறினாள்.

அவனுடன் சரவணன் வீட்டுக்கு வந்து சமையல் வேலை மட்டுமன்றி, மற்ற எல்லா வீட்டு வேலைகளிலும் ராமநாதனின் தோளாடு தோள் நின்று உதவி செய்தாள். நாளடைவில் பணத்தைப் பற்றிய அவன் கருத்து மாறியது. அவன் தன் வாழ்வில் சந்திராவை வாழ்க்கைத் துணைவியாக அடைந்தால் அதுவே பெரிய பொக்கிஷம் கிடைப்பது போல் என்று எண்ண ஆரம்பித்தான்.

ஐந்து ஆண்டுகள் சென்றபிறகு அவன் ஆனந்தனை அடைந்து, "உன் பொருட்டு, நான் அந்த வீட்டில ஐந்து ஆண்டுகள் வேலை செய்து முடித்துவிட்டேன். ஆனால் எனக்கு அந்த ஆயிரம் பொன் தேவையில்லை. அதை நீயே வைத்துக் கொள்! என் வாழ்க்கையின் மிகப் பெரிய செல்வம் சந்திரா ஒருத்தியே என்று உணருகிறேன்!" என்று ராமநாதன் கூறியதும், ஆனந்தன் ஆச்சரியப்பட்டான். அந்த சமயம் அங்கு வந்த பிரகாண்ட ரிஷி, ராமநாதனை மனதார வாழ்த்தினார். நீலாம்பரியும் அக்கணத்திலேயே சாப விமோசனம் பெற்று சுய உருவத்தைப் பெற்றாள்.

(முற்றும்)

## கா.ந.அண்ணாதுரை



அண்ணாதுரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் செப்டெம்பர் 15, 1909- இல் நடராசன் மற்றும் பங்காரு அம்மாளுக்கும் நடுத்தர குடும்பத்தில் மகனாகப் பிறந்தார். அவர் தந்தை ஒரு கைத்தறி நெசவாளர்.

பரவலாக அறிஞர் அண்ணா என்றே அறியப்பட்ட இவர் அரசியலில் காங்கிரசல்லாத திராவிடக்கட்சிகளின் முதல் பங்களிப்பாளராக விளங்குகின்றார். முதன் முதலில் இந்தியா குடியரசான பிறகு ஆட்சி அமைத்த முதல் காங்கிரசல்லாத திராவிடக்கட்சித் தலைவர் என்ற பெருமையுடன், அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தவர் என்ற பெருமையும் கொண்டவர்.

தமிழிலும், ஹிந்தியிலும், 'ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான இவர் பல முற்போக்கு, சீர்திருத்த நாடகங்களையும் எழுதி இயக்கி அதில் ஒரு பாத்திரமாக நடித்தவரும் ஆவார். தமிழ் திரைப் படங்களுக்கு கதை, வசனம் எழுதியவரும் தன்னுடைய திராவிட சீர் திருத்தக் கருத்துக்களை அதன் மூலம் முதன்முதலாக பரப்பியவரும் இவரே. நடுத்தரவர்க்க நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவரான அண்ணாதுரை, தன் ஆரம்பகால வாழ்க்கையை பள்ளி ஆசிரியராகத் தொடங்கியவர், சென்னை இராசதானியில் தன் அரசியல் ஈடுபாட்டினை முதன்முதலில் பத்திரிகையாளராக, பத்திரிகையாசிரியராக வெளிப்படுத்தினார்.

புற்று நோய்க்கு ஆளான அவர், 3 பெப்ரவரி 1969 இல் காலமானார். அவரின் இறுதி ஊர்வலம் கின்னஸ் உலக சாதனையில் இடம்பெறுகின்ற அளவில் மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். பல கல்வி நிறுவனங்கள், கட்சிகள் அவரின் பெயரில் துவக்கப்பட்டன.

அண்ணாதுரை இந்துக் குடும்பத்தில் பிறந்தவராயிருந்தாலும் அவரின் கோட்பாடு சமயம் சாராதவராகவே வெளிப்படுத்துகின்றது. அவர் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டை வெளிப்படுத்தினார். "கடவுள் ஒன்று, மனித நேயமும் ஒன்றுதான்" என்பது அவர் கட்சியின் கொள்கை பரப்பாகவும், அவரின் தொண்டர்களாக கருதப்படும் அவரின் தம்பிகளின் கட்சி வாசகமாகவும் பின்பற்றப்பட்டது. அவர் ஒரு நேர் காணலில் ".....நான் எப்பொழுதுமே கடவுளிடம் உண்மையான நம்பிக்கையுடன் வாதாடுபவன்......" என்றார்

ஒரு முதலமைச்சராக மட்டுமன்றி, ஒரு அறிஞராகவும், சமூக சீர்திருத்த வாதியாகவும், ஒரு சிறந்த அரசியல்வாதியாகவும், மிகச் சிறந்த பேச்சாளராகவும், மக்கள் தலைவனாகவும், இன்றும் தமிழக மக்களால் அவர் நினைவு கூறப்படுகிறார். தி.மு.க விலிருந்து பிரிந்து தனிக்கட்சி துவக்கிய எம்.ஜி.ராமச்சந்திரன் அவரின் பெயரைக்கொண்டு உருவாக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியினால் பெற்ற வெற்றியைக் கொண்டு தமிழகத்தின் ஆட்சியை பின்னாளில் நடத்தினார் என்பது வரலாறு.




- 301 - சீனாவில் சீமா லுன் ஜின் ஆட்சியைக் கைப்பற்றினான்.
- 1509 - போர்த்துக்கல்லுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண்டது.
- 1690 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது காகித நாணயம் மசாசூசெட்ஸில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1876 - பராகுவே ஆர்ஜெண்டீனாவுடன் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.
- 1783 - ஐக்கிய அமெரிக்காவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.
- 1807 - பிரித்தானியப் படைகள் சர் சாமுவேல் ஒஷ்முட்டி தலைமையில் உருகுவேயின் தலைநகர் மொண்டெவிடியோவைக் கைப்பற்றினர.
- 1919 - சோவியத் படையினர் உக்ரேனைப் பிடித்தன.
- 1930 - வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா மார்ஷல் தீவுகளைக் கைப்பற்றியது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் 1,000 விமானங்கள் பெர்லின் மீது குண்டுகளை வீசின.
- 1966 - சோவியத் விண்கலம் லூனா 9 சந்திரனில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் என்ற பெருமையைப் பெற்றது.
- 1969 - யாசர் அரபாத் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகத் தெரிவானார்.
- 1984 - சாலஞ்சர் விண்ணோடத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் புரூஸ் மக்காண்ட்லெஸ், ராபர்ட் ஸ்டுவேர்ட் ஆகியோர் முதன் முதலாக விண்வெளியில் சுயாதீனமான நிலையில் நடந்து சாதனை படைத்தார்கள்.
- 1989 - பராகுவேயில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து 1954 இலிருந்து ஆட்சியிலிருந்த சர்வாதிகாரி அல்பிரெடோ ஸ்ட்ரோயெஸ்னர் பதவியிழந்தார்.

### பிறப்புகள்

- 1898 - அல்வார் ஆல்ட்டோ, கட்டடக் கலைஞர் (இ. 1976)
- 1930 - மணி கிருஷ்ணசுவாமி, கர்நாடக இசை வாய்ப்பாட்டு கலைஞர் (இ. 2012)
- 1976 - ஜெ. ராம்கி, எழுத்தாளர்

### இறப்புகள்

- 1915 - யோன் சிலம்புவே, ஆபிரிக்க விடுதலைப் போராளி (பி. 1871)
- 1924 - வூட்ரோ வில்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க ஜனாதிபதி (பி. 1856)
- 1969 - சி. என். அண்ணாதுரை, தமிழ் நாட்டின் இரண்டாவது முதலமைச்சர் (பி. 1909)
- 2005 - எர்ணஸ்ட் மாயர், உயிரியலாளர் (பி. 1904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...சித்தர்களுக்கெல்லாம் முதல் சித்தராக விளங்கும் சிவபெருமான் மதுரையில் மாயாஜாலம் காட்டி விட்டு மறைந்துபோய் இந்த மாவூத்தில்தான் வெளிப்படுகிறார்.

பாண்டியனுக்கு மகப்பேறு அளிப்பதற்காக மதுரைக்கு வந்து மாய வித்தைகள் காட்டிய சிவசித்தர் இந்த மாவூத்துக்கு வந்ததற்கும் ஒரு காரணமிருக்கிறது.


தன்னை வழிபடும் சித்தர்களுக்காக சிவபெருமானால் உருவாக்கப்பட்டதுதான் மாவூத்து என்ற திருக்குளம்.

சதுரகிரி மலையடிவாரத்தில் தவம் செய்யும் சித்தர்களுக்காக சிவபெருமான் சடா மகுடத்திலிருந்து ஒரு துளி நீரைவிட, அந்த நீரே ஊற்றாகி நாளடைவில் பெரிய திருக்குளமாக மாறியதாம்.

அதுமட்டுமல்ல, இந்த மாவூத்து குளத்தில் புனிதம் கருதி சிவபெருமானே தினமும் அதிகாலை நேரத்தில் அதில் நீராடிச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இப்பொழுதுகூட அதிகாலை நேரத்தில் சூரிய உதயத்திற்கு முன்பு குளத்தில் நீர்ப்பரப்பின் நடுவில் நீர்க் குமிழிகள் பெரிய அளவில் தோன்றி மறைகின்றதாம். உண்மையாக பக்தியோடு தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் கண்களுக்கு இந்த அபூர்வக் காட்சி தென்படுமாம். அது இறைவன் இன்றும் அந்தத் திருக்குளத்தில் நீராடுவதன் அடையாளம் என்று பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவூத்து புனிதத் திருக்குளத்தில் நீராடி, அங்கு கோயில் கொண்டிருக்கும் உதயகிரி நாதரையும், சடாதாரி அம்மையாரையும் வணங்கி வழிபட்டு இளைப்பாறும் நேரத்தில் மாவூத்து



மாவூத்து

தபோவனத்திற்கு மதுரையிலிருந்து மாயசித்தர் வந்தத்தற்கான காரணத்தையும் தெரிந்துகொள்வோம்.

அன்று கயிலையங்கிரியில் இசை மழையாகப் பொழிந்துகொண்டிருந்தது. அந்த இசை மழையில் யாழ்வல்ல தேவரின் யாழிசை தனி இசையாக ஒலித்துக்கொண்டிருந்தது. இந்த யாழிசைக்குக் கயிலையில் இருந்தவர் யாவரும் மயங்கி இருந்தனர். இறைவனும் இறைவியும்கூட தன்னை மறந்த நிலையில் இசையில் லயித்து இருந்தனர்.

எல்லோரும் இசையில் மயங்கியிருந்திருந்த வேளையில் இருவர் மட்டும் தன்னை மறந்த நிலையில் காணப்பட்டனர். இமையோர் உலகில் விழிகள் இமைக்காதது அதிசயமில்லை. ஆனால், அந்த இமைக்க மறந்த வேளையில் ஒரு காதல் நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்ததுதான் ஆச்சரியம். விழிகள் மேடையாக, இமைகள் திரைகளாக பார்வை நாடகம் ஒன்று சந்தடியில்லாமல் அங்கே அரங்கேறிக் கொண்டிருந்தது.

ஆம் யாழை மீட்டிக் கொண்டிருந்த யாழ்வல்ல தேவரும், அந்த யாழிசைக்குச் சுருதி சேர்த்துக்கொண்டிருந்த தேவமது ஒருத்தியும் காதல் வயப்பட்ட நிலையில் தம்மை மறந்து வேறொரு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர். கைகள் மட்டும் தான் இசைக்குச் சுருதி சேர்த்துக்

## ஆன்மீகம் 22

கொண்டிருந்ததே தவிர, மனம் முழுக்க காதலுக்குச் சுருதி கூட்டிக் கொண்டிருந்தது.

எல்லோரும் இசையில் மறந்திருந்த நிலையில் இறைவனுக்கு மட்டும் இந்தச் சுருதி பேதம் புரிய ஆரம்பித்தது.

இறைவனும், இறைவியும் அருகில் இருப்பதைக்கூட மறந்த நிலையில் தேவமாதின் அழகை ரசித்துக் கொண்டிருந்த யாழ்வல்ல தேவரின் காதல் நிலை இறைவனுக்குக் கோபத்தை வரவழைத்தது.

இறைவனின் அசைவு கயிலையை நிசப்தமாக்கியது.

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

34

...லதாவுக்கு நன்றி சொன்னார் செம்மல்: "நடிப்




பில் என்னுடன் கடைசிவரை இருந்தேம்மா. ஒரு வினோதம். நான் முதலில் ஹீரோவாக நடித்தது *ராஜகுமாரி*. அதில் என்னுடன் நடித்தவர் ஒரு மகாராஜா மனைவி (மாலதி). கடைசியில் நடித்தது ஒரு மகாராஜா மகள். அது நீ. நாளையிலேயே இருந்த சி.எம் ஆகப் போறாரு... எம்.ஜி.ஆர். எப்பவும் போலவா... ஆனா சிபார்சு கொண்டுவராதே...." என்றார்.

**மாட்டுக்கார வேலன்**

கன்னடத்தில் களைகட்டி இந்தியில் தலை நிமிர்ந்து தமிழில் வெற்றிக் கொடி நாட்டிய படம் *மாட்டுக்கார வேலன்*.

"*ஜிக்ரி தோஸ்த்* என்ற படத்தைப் பார்த்து நடிக்க ஒப்புக்கொண்டு அதற்கு தலைப்பையும் வைத்து இந்தத் தலைப்பை பட்டுக்கோட்டை யார் பாடலிலிருந்து வைக்கிறேன். அதை திருட வேண்டாம். தலைப்புக்காக அவரது குடும்பத்துக்கு ஒரு சிறு தொகை முதலில் கொடுத்துவிட்டு வாருங்கள்" என்று சொன்னார் செம்மல்.

அக்காலத்தில் நாங்கள் **புன்னகை மன்னன்** என்று சொல்லும் ஜெயந்தி பிக்சர்ஸ் உரிமையாளர் **கனகசபை செட்டியார்** அதன் தயாரிப்பாளர்.

அக்காலப் படங்களில் வெற்றி விழா என்றால் ஒரே ஒரு ஊரில் மட்டும் நடக்காது. அது திரையிடப்பட்டு ஓடும் பல ஊர்களில் நடக்கும்.

அப்படி அந்தப் பட நூறாவது நாள் வெற்றிவிழா சேலத்தில் நடந்த போது ஒரு நிகழ்ச்சி.

அந்த திரையரங்க உரிமையாளர் ஒரு மூதாட்டியை மேடையருகே கொண்டு வந்து நிறுத்தி, "படம் ஓடிய நூறு நாளும் விடாமல் இந்தம்மா டிக்கெட் வாங்கி வந்து பார்த்தார். அவர் உங்களை நேர்லே பார்க்கணுமாம்" என்றார்.

செம்மல் எழுந்து அந்தம்மாவைக் கை கொடுத்து மேடையில் ஏற்றி அருகில் உட்கார வைத்தார்.

மேடையை மறந்தார். தன்னைப் போற்றிப் [illegible] மறந்தார். அந்தம்மாவை [illegible]ரிக்கத் தொடங்கினார்.

"விதவையாகி முப்பது வருடம் ஆச்சு. பிள்ளைங்க இருந்தும் இல்லை. கீரை வித்து வயித்தை கழுவுறேன். அந்த கூடையை சுமந்தா ஒருநாளைக்கு மூணு ரூவா கிடைக்கும். அதிலே ஒரு ரூபாய் உங்க படம் பார்க்க செலவழிச்சேன்" என்றார்.

"எதுக்கம்மா நூறு தடவை பார்க்கணும்" என்ற கேள்விக்கு அந்த தாய் [illegible]சொல்லி, அவர் கண்ணைக் [illegible] வைத்தாள்.

"உன் பால் முகத்தை எத்தனை தடவை பார்த்தாலும் ஆவல் அடங்காதுப்பா. அதோடு ஒன்னை பெத்த புண்ணியவதி எப்படி அதிர்ஷ்டமானவன்னு நினைச்சுப் பார்க்கிறேன். அதுமட்டுமல்ல எங்க சேரியில ஆணும், பெண்ணும் வேதனை நீங்க குடிச்சுட்டு ஆடு வாங்க. எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் இல்லை. என் வேதனைய மறக்க நான் படம் பார்க்குறேனப்பா" என்றார்.

"அம்மா என்னைப் பார்க்க நீங்க நூறு நாள் நூறு ரூபாய் செலவழிச்சிங்க இல்லியா, நான் அதுக்கு ஆயிரம் ரூபாய் தர்றேன். வாங்கிக்குங்க" என்றார்.

"யப்பா உனக்கு அம்மான்னா உசிராமே! தாய், தன் பிள்ளையைப் பாக்க கூலி வாங்கணுமா என்ன? வச்சுக்கோ. ஆண்டவன் கொடுக்கிறது போதும்" என்றாள்.



மாட்டுக்கார வேலன் படத்தில் எம்.ஜி.ஆருடன் ஜெயலலிதா

சுருக்கம் மிகுந்த அந்தக் கையை அவர் முத்தமிட்டபோது அந்த திரை அரங்கமே திகைத்தது. அதிர்ந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாண சபைத் தேர்தல்; தமிழ்க் கூட்டணிக்குள் பிளவு!

## தனித்து களமிறங்க தொ.காங்கிரஸ் முடிவு

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மேல் மாகாணத்தில் தமிழ்க் கூட்டணி அமைத்துப் போட்டியிடத் தயாராகி வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுக்குமிடையே திடீரென பிளவு ஏற்பட்டு, அவை இரண்டும் இணைந்து போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவித்துள்ளன.

இதையடுத்து மேல் மாகாணத்தில் இ. தொ. கா. தனது சேவல் சின்னத்தில் தனித்துக் களமிறங்க முடிவெடுத்துள்ள நிலையில், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியானது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து அதன் சின்னமான மயில் சின்னத்தில் போட்டியிடவும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இ. தொ. கா. வின் தலைவரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கத்திடம் வினவிய போது, கருத்து முரண்பாடுகள் காரணமாக இரு கட்சிகளும் பிளவுபட்டதை அவர் உறுதி செய்தார்.

தமது கட்சி இணைந்து போட்டியிடுவதில் ஆர்வமாகவே இருந்தது எனவும் ஆனால் அந்த ஆர்வம் ஜனநாயக மக்கள் காங்கிரஸிடம் காணப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

வேட்பாளர் ஆசன ஒதுக்கீட்டின் போது அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டது மட்டுமல்லாது, வேட்பாளர் பட்டியலைத் தருமாறு கேட்டபோதும் அதனை உரிய நேரத்தில் தரவும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இதனால் தொடர்ந்தும் அவர்களுக்குப் பின்னால் அலைந்து திரிய முடியாது எனும் காரணத்தினால் நாம தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்தோம் எனவும் அவர் தெரிவிததார்.

இ. தொ. கா. தலைவர் முத்து சிவலிங்கத்தின் இக் குற்றச்சாட்டு தொடர்பாக ஜ. ம. கா. தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசனிடம் வினவியபோது, அவர் இக் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தார்.

வேட்பாளர் பட்டியல் வழங்கலில சிறிது காலதாமதம் ஏற்பட்டதை ஒத்துக்கொண்ட அவர் இ. தொ. கா. கூறுவதைப் போன்று அதற்கான அவசரம் அப்போது எழவில்லை. எனினும் அதனை இ. தொ. கா. சாட்டாக எடுத்தமை வருந்தத்தக்க விடயம் எனவும் தெரிவித்தார்.

எனவே முறிவடைந்த தமது கூட்டணி தொடர்பாகத் தான் அலட்டிக் கொள்ளாமல் தனது வேட்பாளர்களை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைத்துப் போட்டியிட வைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் ஆக்கபூர்மான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வேட்பாளர் ஆசன ஒதுக்கீட்டில் விட்டுக்கொடுப்பு இல்லாத காரணத்தினால் இரு தரப்பினரிடையேயும் முரண்பாடு ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (செ-2)

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங். கடற்படையினர் தாக்குதல்

இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக்கடற்படையினர்மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் மாலை 624 விசைப்படகுகளில் 3 ஆயிரம் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். சில மீனவர்கள் கச்சதீவு அருகே வலையை விரித்து மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது இலங்கை கடற்படையினர் சிறிய படகுகளில் ரோந்து வந்தனர். அவர்கள் அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை பார்த்து எச்சரிக்கை விடுத்தனர். இங்கு மீன்பிடிக்க வரக் கூடாது என்று பலமுறை சொல்லியும் ஏன் வருகிறீர்கள் என்று கூறி மீனவர்கள் மீது வெறித்தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர்.

மேலும் 50க்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீன்பிடி சாதனங்களையும், கடலில் விரித்திருந்த வலைகளையும் அறுத்து எறிந்து நாசம் செய்தனர். இதனால் மீனவர்கள் உயிருக்கு பயந்து படகுடன் மீனகள் எதுவும் பிடிக்காமல் கரைக்கு திரும்பினர்.

மீனவர்கள் திரும்பி செல்லும் போது இலங்கை கடற்படையின் படகு ஒன்று மீனவரின் விசைப் படகு மீது மோதியது. இதில் மீனவரின் விசைப்படகு கடலில் மூழ்கியது. இதனால் அதில் இருந்த மீனவர்கள் உயிர் தப்பி ஏனைய மீனவர்களின் படகுகளில் ஏறி கரை திரும்பினர்.

இது குறித்து அவர்கள் கூறும் போது, இலங்கை கடற்படையின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. இதனால் மீனவர்கள் குடும்பம் பசி, பட்டினியால் தவித்து வருகிறது. மீனவர்களை காப்பாற்ற மத்திய அரசு போர்க்கால நடவடிக்கை எடுகக வேண்டும் என்று கண்ணீரு டன் கூறினர். (2)

# இந்திய மீனவர்கள் 19 பேர் கைது

யாழ். காங்கேசன்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் 19 பேரை நேற்று அதிகாலை கைதுசெய்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தியா ஜனதாப்பட்டிணப் பகுதியிலிருந்து 5 ரோலர் படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் 19 பேரை கைதுசெய்த காங்கேசன்துறை கடற்படையினர், யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் மீனவர்களை ஒப்படைக்கவுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. (2-6)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் முல்லைத்தீவு மாவட்ட முள்ளியவளைப் பிரதேசத்திலுள்ள பாரதி பெண்கள் இல்ல மாணவியர்களுக்கான உதவிகள் அண்மையில் வழங்கப்பட்ட போது...

# ஆஸி.கடற்கொள்ளையர்களிடம் சிக்கும் இலங்கை அகதிகள்



இலங்கை அகதிகள் முகாம் களிலிருந்து தப்பி செல்பவர்கள் காணாமல் போகின்றனர். பலர் சோமாலிய கடற்கொள்ளையர் களிடம் பிடிபடுகின்றனர். அவர்களை மீட்க சோமாலிய தூதரகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் கூறியுள்ளார்.

இது தொடர்ப ாக காரைக்குடியில் அவர் கூறியதாவது,

இந்திய, இலங்கை மீனவர்களிடையே, கடந்த இரண்டு முறையும் கொண்டு வந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே, மூன்றாவது சுற்று பேச்சு வார்த்தை முடிந்துள்ளது.

இரண்டாவது சுற்று பேச்சு வார்தையில் உள்ள தீர்மானத்தின் படி, இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லையை முன்னிறுத்தாமல், மீனவர்கள் தங்களுக்குரிய வாய்ப்புகளை பயன்படுத்தி, இரண்டு பக்கமும், ஒவ்வொரு நாள் ஒதுக்கீடு செய்து மீன்பிடித்து கொள்ளலாம்.

துறைமுகங்களை நோக்கி செல்லக்கூடாது. இதை இருநாட்டு அரசும ஒத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான பேச்சுவார்த்தை டில்லியில் நடந்துள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.

இது நடந்து விடுமோ, பிரச்சினை தீர்ந்து விடுமோ என அச்சப்படும் வெளிநாட்டு சக்திகள் அமைதியை குலைக்க வேண்டும் என சில சதி வேலைகளை செய்[illegible]னர். தமிழக அரசியல்வா[illegible] இதற்கு துணை நிற்காமல் மீனவர்களின் பிரச்சினைக்கு துணை நிற்க வேண்டும்.

சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் காலனியில் 17 அகதிகள் காணாமல் போய் உள்ளதாக புகார் கூறியுள்ளனர். அவர்களை போல்பலர்தமிழகம் முழு வதிலும் உள்ள முகாம் களிலிருந்து காணாமல் போய் உள்ளனர்.

இவர்கள் கள்ளத்தோணியில் சென்று விடும் போது, இறந்து விடுகின்றனர். சில இடங்களில் சோமாலியா கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்படுகின்றனர் என அவர்கள் உறவினர்கள் எனக்கு புகார் அளித்துள்ளனர்.

அதன் அடிப்படையில், சோமாலிய தூதரகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அகதிகள் இருக்கும் பட்சத்தில அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும. அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் அகதிகளை மீட்டு அவர்கள் [illegible] என்றார். (செ-2)

# நாட்டின் தேசத்துரோகிகள்!

## அமைச்சர் ரோகித குற்றச்சாட்டு

சர்வதேச விசாரணை அவசியம் என வலியுறுத்தி வட மாகாண சபையில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது அக்கட்சி சொந்தத் தாய் நாட்டிற்குச் செய்து வரும் தொடர்ச்சியான தேசத் துரோகச் செயற்பாடுகளின் உச்சக் கட்டம் என அமைச்சர் ரோகித அபே குணவர்த்தன குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனை மனச்சாட்சியுள்ள எந்தவொரு தமிழரும் ஏற்கமாட்டார்கள். வெளிநாட்டில் வாழும் புலிகளுக்குச் சார்பான புலம் பெயர் தமிழ் மக்கள் சிலரின் விருப்பிற்கு தாம் பிறந்த சொந்தத் தாய் நாட்டில் வாழ்ந்து கொண்டே அந்நாட்டிற்குத் துரோகமிழைக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள் மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்து வருகின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் தொடர்ச்சியாக அவர்கள் பல முனைப்புகளிலும் அபகீர்த்தியை ஏற்படுத்தி வரும் நிலையில், இந்தச் செயல்பாடானது அதன் உச்சக் கட்டத்தை எடுத்துக் காட்டுவதாகவும், பிரபாகரன் கொல்லப்பட்டதை தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையானோர் விரும்பி வரவேற்றதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

முப்பது வருடகால பயங்கரவாத யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தி தமிழ மக்கள் மட்டுமல்லாது முழு நாட்டு மக்களுமே நிம்மதியாக வாழ வழி சமைத்த இன்றைய அரசாங்கத்திற்கு எதிராகத் தமிழ்க் கூட்டமைப்பு செய்து வரும் போலிப் பிரசாரங்கள் உலக அரங்கில் இனியும் எடுபடாது எனவும் தெரிவித்தார்.

புலிகளின் கொலைப்பட்டியலிலிருந்த கூட்டமைப்பிலுள்ள பல தலைவர்களை அவர்களிடமிருந்து காப்பாற்றி உயிர் தப்பி சுதந்திரமாக அரசியல் செய்து வாயில் வரும் கற்பனைகளையெல்லாம் அறிக்கைகளாகவும், பிரேரணைகளாகவும் தெரிவிக்க இந்த அரசாங்கமே உதவி புரிந்தது என்பதை அவர்கள் மறக்கக்கூடாது என்றார். (செ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை கடல் எல்லை; எட்டப்படுமா சாதகமான முடிவுகள்



## மீனவர் வாழ்வில் நம்பிக்கை ஒளி

உயிர்ப் பலி, துப்பாக்கித் தாக்குதல், வாழ்வாதரப்பாதிப்பு, சிறைத் தண்டனை எனப் பல்வேறு பிரச்னைகளை அனுபவித்துவரும் தமிழக மீனவர்களுக்கு நம்பிக்கை மின்னலாக அமைந்தது, சென்னை மீன்வளத் துறை இயக்குநர் அலுவலகத்தில் தமிழக அரசு ஏற்பாடு செய்த அந்தப் பேச்சுவார்த்தை. தமிழக - இலங்கை மீனவப் பிரதிகள் அதில் பங்கேற்றனர்.

கடந்த 27 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தொடங்கிய பேச்சுவார்த்தை, இரவு 8 மணி வரை நீடித்தது. இதில் தமிழக, புதுச்சேரியைச் சேர்ந்த 13 மீனவப் பிரதிநிதிகள், தமிழக மீன்வளத் துறை அமைச்சர் ஜெயபால் தலைமையில் எட்டு தமிழக அதிகாரிகள் மற்றும் மூன்று மத்திய அரசு அதிகாரிகளும் இலங்கையிலிருந்து 10 மீனவப் பிரதிநிதிகள், எட்டு இலங்கை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தை குறித்து அமைச்சர் ஜெயபால், "இரு நாட்டு அரசுகளும் கலந்து ஆலோசித்து, பேச்சுவார்த்தையின் முடிவுகளை அறிவிக்கும்" என்றார்.

பேச்சுவார்த்தையில் நடந்தது என்ன என்று பார்வையாளராகப் பங்கேற்ற அகில இந்தியப் பாரம்பரிய மீனவர் சங்கத் தலைவர எஸ்.ஏ.மகேஷிடம் கேட்டோம். "தமிழகக் கடலோரப் பகுதிகளிலிருந்து மீனவர்கள் தரப்பில் பிரதிநிதிகள் பங்கேற்றனர். தமிழக மீனவப் பிரதிநிதி அருளானந்தம் தன் வரவேற்புரையிலேயே மீனவர்களின் பிரச்னைகள், பாதிப்புகள் குறித்துப் பேசினார். அப்போது இலங்கை மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். 8 மணி நேரத்துக்கு மேல் இரு நாட்டு மீனவர்களும் தங்களது வாதங்களை முன்வைத்தனர். அனைத்தையும் இரு நாட்டு அதிகாரிகளும் அமைதியாகக் கேட்டுக் கொண்டனர். சுமுக தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே அமைச்சர் ஜெயபால் மற்றும் தமிழக அதிகாரிகள் செயற்பட்டனர். அமைச்சர் ஜெயபால் நாகை மாவட்ட மீனவர் என்பதால், தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து அவருக்கு நன்றாகத் தெரியும். பேச்சுவார்த்தையின் இறுதியில் ஐந்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

பேச்சுவார்த்தை நடப்பதால் குறிப்பிட்ட காலம் வரை பாக் ஜலசந்திப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது. இலங்கையில் தடைசெய்யப்பட்ட இழுவை மடி, இழுவைப் படகு உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களைத் தமிழக மீனவர்கள் பயன்படுத்தக் கூடாது. கைதுசெய்யப்பட்ட இரு நாட்டு மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், வலைகளைத் திரும்பக் கொடுக்க வேண்டும். பெப்ரவரி மாத இறுதி அல்லது மார்ச் முதல் வாரத்தில் கொழும்பில் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில், தமிழக மீனவப் பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டும் என்பதே பேச்சுவார்த்தையின் முக்கிய சாராம்சம். இந்த முடிவுக்கு இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளும் சம்மதம் தெரிவித்துக் கையெழுத்திட்டனர்.

எல்லைப் பிரச்சினை குறித்து தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைக் கருத்தில்கொண்டு மத்திய அரசு முடிவெடுக்க வேண்டும். பேச்சுவார்த்தையின் முடிவுகளையும் அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும். இந்தியாவில் இழுவை மடி வலை என்ற மீன்பிடித்தலுக்கு அனுமதி உள்ளது. ஆனால் இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவை மடி வலை மற்றும் படகுகள் மூலம் பாக் ஜலசந்திப் பகுதியில் இலங்கை மீனவர்களும் மீன்பிடிக்கின்றனர்.

இதை இலங்கை அரசு கட்டுப்படுத்த வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவுகள் இலங்கை அரசுக்கு சாதகமாக இருப்பதாக இருந்தாலும், விட்டுக்கொடுத்து பேச்சுவார்த்தையைத் தொடங்கி இருக்கிறோம். முடிவு, தமிழக மீனவர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் எடுக்கப்படும்" என்றார்.

பேச்சுவார்த்தையில் பங்கேற்ற இலங்கை, இந்திய மீனவச் சங்கங்களின் அமைப்பின் இலங்கை அமைப்பாளர் பி.அந்தோணிமுத்துவிடம் பேசினோம். "பேச்சுவார்த்தையில் இலங்கை, தமிழக மீனவர்களுக்கு இடையே நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் விவாதித்தோம். இலங்கையில் யுத்தம் முடிந்து இப்போதுதான் வடகிழக்குப் பகுதி மீனவர்கள் மீன்பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.

அதை அழிக்கும் வகையில் தமிழக மீனவர்கள் தடைசெய்யப்பட்ட இழுவை மடி உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களை வைத்து மீன்பிடிக்கின்றனர். இழுவை மடி வலை மூலம் மீன்வளங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் பிரச்சினைக்குரிய பாக் ஜலசந்திப் பகுதியில் ஒரு வருடம் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது என்று முதலில் தெரிவித்தோம். இதற்குத் தமிழக மீனவப் பிரதிநிதிகள் சம்மதிக்கவில்லை. இதன் பிறகு ஒரு வருட காலம், ஒரு மாதமாகக் குறைக்கப்பட்டது. இதற்கும் தமிழக மீனவப் பிரதிநிதிகள் சம்மதிக்காததால் 15 நாட்கள் என்று கால அவகாசத்தைக் குறைத்துள்ளோம். இந்தக் குறிப்பிட்ட காலம் என்ற முடிவை, இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளும் நல்லிணக்க அடிப்படையில் எடுத்துள்ளனர். எல்லை மீறுவது என்பது சட்டவிரோதமானது. எல்லை மீறும் மீனவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள். சிறைபிடிக்கப்பட்ட இரு நாட்டு மீனவர்களும உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது, சுட்டுக் கொல்லப்படுவது உறுதிசெய்யப்படவில்லை. எல்லையைத தாண்டி வரும் தமிழக மீனவர்களைக் கைது செய்வதோடு சரி. இலங்கைக் கடற்படையினர் தாக்குதலே நடத்தவில்லை. இந்தப் பிரச்சினை குறித்து இரு நாட்டு அரசுகளுமே பேசி முடிவெடுக்க வேண்டும்.

பாக் ஜலசந்திக் கடல் பகுதி தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி இடம் என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இரு நாட்டு மீனவர்களுக்கும் எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் முடிவுகள் இரு நாட்டு மீனவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்" என்றார்.

> " இலங்கை அமைப்பாளர் பி.அந்தோணிமுத்துவிடம் பேசினோம். பேச்சுவார்த்தையில் இலங்கை, தமிழக மீனவர்களுக்கு இடையே நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் விவாதித்தோம். இலங்கையில் யுத்தம் முடிந்து இப்போதுதான் வடகிழக்குப் பகுதி மீனவர்கள் மீன்பிடிக்கத் தொடங்கியுள்ளனர். அதை அழிக்கும் வகையில்தமிழக மீனவ ர்கள் தடைசெய்யப்பட்ட இழுவை மடி உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களை வைத்து மீன்பிடிக்கின்றனர். இழுவை மடி வலை மூலம் மீன்வளங்கள் அழிக்கப்படுகின்றன. "

பேச்சு வார்த்தையின் போது



ஜூனியர் விகடன்

# மாகாணசபைத் தேர்தலையடுத்து அமைச்சரவையில் அதிரடி மாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அடுத்த அமைச்சரவை மாற்றத்திற்கான தயார்ப்படுத்தல்கள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகபெரும, அனுர பிரியதர்ஷன யாப்பா, எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் போது, முக்கிய அமைச்சர்களின் பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

அமைச்சர்கள் டிலான் பெரேரா, சுசில் பிரேமஜயந்த, எஸ்.பி. திஸாநாயக்க, அனுர பிரியதர்ஷன யாப்பா உட்பட பல அமைச்சர்களின் பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் தற்போது பிரதியமைச்சராக இருக்கும் சனத் ஜயசூரிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை புதிதாக சிலர் பிரதியமைச்சராக நியமிக்கப்பட உள்ளனர். உபேக்ஷா சுவர்ணமாலி, நில்வலா விஜேசிங்க, அருந்திக்க பெர்[illegible] [illegible] காரா, சுதர்[illegible] ஆகியோருக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்பட உள்ளதாக தெரியவருகிறது.

சரத் வீரசேகர, சாந்த பண்டார ஆகியோருக்கு இம்முறையும் பிரதியமைச்சர் பதவிகள் கிடைக்காது என கூறப்படுகிறது. அத்தோடு நாமல் ராஜபக்சவுக்கும் அமைச்சர் பதவியை வழங்குவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியில் மாற்றங்கள் ஏற்படுத்துவது குறித்து இதுவரை தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனினும் வெளிவிவகார அமைச்சர் பதவியில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் முடிந்தவுடன் இந்த புதிய அமைச்சரவை மாற்றம் ஏற்படுத்தப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (2)

# அரசின் வீழ்ச்சி ஆரம்பம்- கபீர்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆரம்பமாகியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கத்திற்கு எதிராக பெண்கள் அணி திரள்வது ஆபத்தானது.

தற்போதைய அரசாங்கத்தின் மீது பெண்கள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர். எனவே இந்த நிலைமை அரசாங்கத்திற்கு பாதகத்தன்மையை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளப் புரட்சியின் பின்னடைவு உணர்த்தும் உண்மைகள்...!


மன்னராட்சியைத் தூக்கியெறிந்த ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு) நாடாளுமன்ற சரணடைவுப் பாதையில் சரிந்து வீழ்ந்ததால்தான் பெருத்த தோல்வியை அடைந்திருக்கிறது.



ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை நாடாளுமன்ற சரணடைவுப் பாதைக்குத் தள்ளிய துரோகத் தலைமை பிரசண்டா மற்றும் பாபுராம் பட்டாராய்.

நேபாளத்தில் 2008-இல் நடந்த முதலாவது அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களில் 229 இடங்கள் பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்திருந்த ஐக்கிய நேபாள பொதுவுடமைக் கட்சி (மாவோயிஸ்ட்) [UCPN (Maoist)] கடந்த ஆண்டு நவம்பரில் இரண்டாவது அரசியல் நிர்ணய சபையை அமைப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தலில் பெருத்த தோல்வியைச் சந்தித்திருக்கிறது. அக்கட்சி இந்தத் தேர்தலில் நேரடி வாக்குப் பதிவு மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் ஆகிய இரண்டையும் சேர்த்து வெறும 80 இடங்களை மட்டுமே கைப்பற்றியிருக்கிறது. அக்கட்சியின் முக்கியத் தலைவர்களான பிரசண்டாவும், பாபுராம் பட்டாராயும் தலா இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு தொகுதியீல் மட்டுமே, அதுவும் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற் றுள்ளனர். அக்கட்சியின் வேட்பாளர்கள் பலர் காப்புத் தொகையைக்கூட இழக்கும் அளவிற் குத் தோல்வியடைந்து, அக்கட்சி மூன்றாமிடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, 2008-இல் நடந்த தேர்தலில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த நேபாள காங்கிரசு கட்சியும் (NC) போலி கம்யூனிஸ்ட் கட்சியான ஐக்கிய மார்க்சிய-லெனினியக் கட்சியும் [CPN (UML)] இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளன. மன்னராட்சி தூக்கியெறியப்பட்ட நிலையில் நடந்த முதல் அரசியல் நிர்ணயசபைக்கான தேர்தலும் அதில் ஐக்கிய மாவோயிஸ்ட் கட்சி அடைந்த வெற்றியும் ஒரு புதிய நேபாளம் உருவாகும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது என்றால், இரண்டாவது அரசியல் நிர்ணயசபை தேர்தல் முடிவுகள் நேபாளத்தை ஓர் இருண்ட எதிர்காலத்திற்குள் தள்ளியிருக்கின்றன. "கம்யூனிசம் தோற்றுப்போவிட்டது" என ஏகாதிபத்தியவாதிகள் கூச்சல் போட்டுக் கொண்டி



ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஆதிக்கம் செலுத்திய முதலாளித்துவப் பாதையாளர்களை எதிர்த்து வெளிவந்து, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி என்ற புதிய புரட்சிகரக் கட்சியைத் தொடங்கியுள்ள தோழர்கள் கிரண், பசந்தா மற்றும் கஜுரேல்.

ருந்த வேளையில் புரட்சிகர சக்திகளுக்குப் பெரும் உற்சாகத்தை அளிக்கக்கூடிய வகையில் நடந்த நேபாள புரட்சி, இங்ஙனம் பின்னுக்குப் போயிருப்பது வருத்தமளிக்கக்கூடியதென்றாலும், இந்தத் தலைகீழ் மாற்றத்திற்கான உண்மைக் காரணத்தை ஆராய்ந்து, இப்பின்னடைவை மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளின் அடிப்படையில் புரிந்துகொள்வது அவசியமான ஒன்றாகும்.

"தேர்தல் முறைகேடுகளால்தான் தமது கட்சி தோல்வியடைந்துவிட்டதாக" ஐக்கிய நேபாள மாவோயிசக் கட்சி கூறியிருக்கிறது. முதலாளித்துவ நாடாளுமன்றத் தேர்தல்களும் முறைகேடுகளும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் என்ற போதும், இந்த விளக்கம், தான் செய்த தவறுகளை அக்கட்சி மிகவும் மலிவான முறையில் மூடிமறைக்க எத்தனிக்கும் நொண்டிச்சாக்கு தவிர வேறில்லை. மாறாக, மன்னராட்சியைத் தூக்கியெறிந்த நேபாளப் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதில் அக்கட்சி செய்த தவறுகள்தான் இத்தோல்விக்கான அடிப்படையாக அமைந்தன.

நாம் இப்படிக் கூறும் அதேசமயம், இந்தத் தோல்விக்கு வேறொரு எளிதான காரணத்தை இந்திய மாவோயிஸ்டுகள் முன்வைக்க வாய்ப்புண்டு. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு மன்னராட்சிக்கு எதிராக நேபாளத்தில் வெடித்த எழுச்சியினையடுத்து நேபாள மாவோயிசக் கட்சி மன்னராட்சியைத் தூக்கியெறிந்து அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் திட்டத்தை முன்வைத்து ஏழு கட்சி கூட்டணியோடு அமைதி ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டது. மாவோயிசக் கட்சியினரின் அந் நடவடிக்கையை வலது சந்தர்ப்பவாத சரணடைவு எனக் குற்றஞ்சுமத்திய இந்திய மாவோயிஸ்டுகள், தற்போதைய இத்தோல்விக்கு அதையே காரணமாக கூறக்கூடும். இது மட்டுமின்றி, இப்படியெல்லாம் நடக்கும் என்று அன்றே சொன்னோம் என்று இன்றைய பின்னடைவுக்கு வியாக்கியானம் அளிக்கவும் கூடும்.

நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு புதிய ஜனநாயகப் புரட்சியை சாதிக்கும் நோக்கத்தோடு நேபாள மாவோயிசக் கட்சி 1996 தொடங்கி மக்கள் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில், அப்புரட்சி 2005-06 ஆம் ஆண்டுகளில் ஒரு புதிய இடைக்கட்டத்திற்குள் நுழைந்தது. இற்றுவிழுந்து கொண்டிருந்த மன்னராட்சியைத் தூக்கியெறிந்து ஒரு ஜனநாயகக் குடியரசை அமைக்க வேண்டிய உடனடி அரசியல் கடமை முன்வந்தது. மன்னராட்சிக்கு எதிரான மக்கள் விடுதலைப் படையின் கிராமப்புற ஆயுதந்தாங்கிய போராட்டம் என்பதிலிருந்து நாடு தழுவிய மக்கள் பேரெழுச்சி என்ற அரசியல் போராட்டம் வெடிப்பதற்கான காலம் கனிந்திருந்தது. அச்சமயத்தில் நேபாள மாவோயிஸ்டுகள் இப்பேரெழுச்சியைக் கண்டு கொள்ளாமல் ஒதுங்கிக்கொண்டு, தொடர்ந்து கிராமப்புற ஆயுத போராட்டங்களில் மட்டுமே கவனத்தைச் செலுத்தியிருந்தால், அக்கட்சி தனிமைபட்டுப் போயிருக்கும் என்பது மட்டுமல்ல் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட அந்நிய சக்திகளால் மன்னராட்சி காப்பாற்றப்பட்டு, நேபாளப் புரட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கும்.

நேபாள மாவோயிசக் கட்சி இந்த இடைக் கட்டத்திற்கேற்ப, "அரசியல் நிர்ணய சபையை நிறுவு, அதற்கான தேர்தலை உடனே நடத்து" என்ற முழக்கங்களை முன்வைத்து இந்தப் பேரெழுச்சிக்குத் தலைமையேற்றதோடு, மன்னராட்சியை அகற்ற முன்வந்த ஏழுகட்சி கூட்டணியோடும் அமைதி ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டது. இதன் விளைவாக நேபாளத்தில் இந்து மன்னராட்சி அகற்றப்பட்டதோடு, அந்நாடு மதச்சார்பற்ற குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. இது, புதிய ஜனநாயகப் புரட்சி என்ற போர்த்தந்திரத்தை நிறைவேற்றும் வளர்ச்சிப் போக்கில் செயல்தந்திர ரீதியாக மாவோயிஸடுகள் அடைந்த வெற்றியாகும்.

இதனையொத்த இடைக் கட்ட நிலைமை ரஷ்யாவில் 1905-லும், சீனாவில் 1924-27 மற்றும் 1945-47 கால கட்டங்களிலும் எழுந்தன. சீன கம்யூனிஸ்ட் கட்சி 1924-27 கால கட்டத்தில் கோமிங் டாங் கட்சியோடு கூட்டணி அரசில் பங்கெடுத்திருந்தது. 1946 ஜனவரியில் தேசிய ஜனநாயக சட்டப்பேரவையை அமைக்கும் ஒப்பந்தத்தில் சீன கம்யூனிஸ்டு கட்சியும் கோமிங்டாங் கட்சியும் கையெழுத்திட்டன.

1917 பெப்ரவரியில் ரஷ்யாவில் ஜாராட்சி தூக்கியெறியப் பட்டாலும், அரசுக் கட்டமைவு முழுவதும் வீழ்த்தப்படவில்லை. குறிப்பாக, ஜாராட்சியிலிருந்த இராணுவம் கலைக்கப்படாததோடு, முதல் உலகப் போரிலும் அது ஈடுபட்டு வந்தது. ஜார் தூக்கியெறியப்பட்டதைப் புரட்சி என ஏற்றுக் கொள்ளும்பொழுது, நேபாளத்தில் பழைய இராணுவமும் அரசுக் கட்டமைவும் இன்னும் நீடித்திருப்பதைக் காட்டி, நேபாளத்தில் மன்னராட்சியைத் தூக்கியெறிந்து மாவோ யிஸ்டுகள் அடைந்த செயல்தந்திர வெற்றியை அங்கீகரிக்க மறுப்பது ஒருதலைப் பட்சமானது மட்டுமல்ல் புரட்சி நெளிவுசுளிவின்றி நேர்கோட்டுப் பாதையில்தான் பயணிக்கும் என்று கருதும் வறட்டுத்தனமுமாகும்.

சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றில் மேலிருந்து (அரசிலிருந்து) செயல்புரிவது என்னும் போராட்ட வடிவம் மற்றும் தற்காலிகப் புரட்சிகர அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னிபந்தனைகளை லெனின், "ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரு செயல்தந்திரங்கள்" என்ற நூலில் வகுத்து முன்வைத்துள்ளார்.

"தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சி பங்கேற்றாலோ, இல்லாவிட்டாலோ, எப்படி இருந்தபோதிலும் தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தின் மீது நாம் கீழிருந்து நிர்ப்பந்தம் கொண்டுவர வேண்டும். கீழிருந்து இந்த நிர்ப்பந்தத்தைச் செயற்படுத்த முடிவதற்குப் பாட்டாளி வர்க்கம் ஆயுதமேந்தியிருக்க வேண்டும். அது ஆயுதமேந்தச் செலுத்தும் நிர்ப்பந்தத்தின் நோக்கம் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாப்பது, கெட்டிப்படுத்துவது, விரிவுபடுத்துவது. அதாவது, பாட்டாளி வர்க்க நலன்களின் நிலையிலிருந்து பார்க்கும்போது அந்த ஆதாயங்கள் நம் குறைந்தபட்ச வேலைத்திட்டம் முழுவதையும் நிறைவேற்றுவதாக அமைந்திருக்க வேண்டும்" என்று லெனின் கூறியிருக்கிறார். நக்சல்பாரி புரட்சிகர கட்சியான இ.பொ.க. (மா-லெ) மாநில அமைப்பு கமிட்டி 1981-இல் நிறைவேற்றிய "இந்தியப் புரட்சிக்கான அரசியல் பாதையும் இராணுவப் பாதையும்" என்ற தனது ஆவணத்தில் இக்கோட்டுபாடுகளை விரிவாக விளக்கி முன்வைத்திருக்கிறது.'

இரண்டாவது அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலைப் புறக்கணிக்க் கோரி நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு) [NCP (Maoist)]-யைச் சேர்ந்த தேசிய இளைஞர் மக்கள் தொண்டர் படை காவ்ரே என்ற ஊரில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

2008-க்கும் 2013-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் நேபாள ஐக்கிய மாவோயிசக் கட்சி தனது தலைமையில் இரு கூட்டணி அரசுகளை அமைத்த போதும் சரி, அக்கட்சி எதிர்க்கட்சியாகச் செயலாற்றியபோதும் சரி இந்த மா-லெ நிபந்தனைகளை பற்றுறுதியோடு கடைப்பிடிக்காமல் உதாசீனப்படுத்தியது. நேபாளத்தின் பிரதமராக பிரசண்டா இருந்தபொழுது, நேபாள இராணுவம் குடிமக்களின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட வேண்டும் என அவரது அரசு கோரியதோடு, அதற்குக் கட்டுப்பட மறுத்த நேபாள இராணுவத்தின் தலைமைத் தளபதி ருக்மாங்கத் கடுவாலைப் பதவி நீக்கம் செய்யவும் முடிவெடுத்தது. இம்முடிவை ஆதரிப்பதாகக் கூறிய போலி கம்யூனிஸ்டுகளான ஐக்கிய மார்க்சிய-லெனினிய கம்யூனிசக் கட்சி, பிரசண்டாவின் மந்திரிசபை இந்த முடிவை அறிவித்தவுடன் அதனைத் துரோகத்தனமாக எதிர்த்ததோடு, தனது கட்சியைச் சேர்ந்த அதிபர் ராம் பரண் யாதவ் மூலம் மந்திரிசபை முடிவை ரத்தும் செய்தது. அதிபரின் இந்த முடிவை எதிர்த்து பரசண்டா மே 2009-இல் பதவி விலகினார. இதன் பின் நேபாள காங்கிரசின் ஆதரவோடு பிரதமர் பதவியில் அமர்ந்த போலி மார்க்சிய-லெனினிய கம்யூனிசக் கட்சியைச் சேர்ந்த மாதவ் குமார் நேபாள் சமாதான ஒப்பந்த விதிகளை மீறி இராணுவம் ஆளெடுப்பதற்கு அனுமதி வழங்கினார்.

நேபாள மாவோயிசக் கட்சி இதனை எதிர்த்துத் தெருப் போராட்டங்களை நடத்தியதையடுத்து, அந்த நிர்பந்தத்தால் மாதவ் குமார் நேபாள் அரசு 2010 ஜூனில் பதவி விலகும்படி நேர்ந்தது. எனினும், நேபாள ஐக்கிய மாவோயிசக் கட்சி கீழிருந்து நடத்திய இப்போராட்டத்தை இறுதிவரை கொண்டு செல்லவில்லை. மாறாக, தனது போராட்டத்தால் பதவி விலகிய போலி மார்க்சிய-லெனினியக் கம்யூனிஸ்டு கட்சியுடனேயே கூட்டணி சேர்ந்தது. நேபாள காங்கிரசையும் போலி மார்க்சிய-லெனினிய கம்யூனிசக் கட்சிக்குள் இருக்கும் வலதுசாரி பிரிவையும் தனிமைப்படுத்தும் தந்திரோபாயம் இதுவெனக் கூறி இக்கூட்டணிக்குப் பட்டுக் குஞ்சம கட்டியதோடு, அக்கட்சியைச் சேர்ந்த ஜல்நாத் கனாலை பிப். 2011-இல் பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கும் ஆதரவளித்தது. அடுத்த ஆறே மாதத்தில் கனால் அரசைக் கவிழ்த்துவிட்டு, மாதேசி ஜன் அதிகார் கட்சியோடு கூட்டுச் சேர்ந்த நேபாள மாவோயிசக் கட்சி, பாபுராம் பட்டாராயை பிரதமராக்கியது.


(தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை மீறியதாலேயே புலிகள் வீழ்ச்சியடைந்தனர்

## சர்வதேச பின்னடைவுக்கு இதுவே காரணம்- சம்பந்தன்



ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் மதிக்கத் தவறியதாலேயே புலிகள் சர்வதேச ரீதியில் பின்னடைவைச் சந்தித்து இறுதியில் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டது எனத் தமிழ்த் தேசியக்' கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் த இந்து தமிழ் நாளிதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே சம்பந்தன் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். புலிகளின் மிகப் பெரிய தவறுகளாக எவற்றைக் கருதுகிறீர்கள்? எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், மனித உரிமைகளை அவர்கள் மதித்திருக்க வேண்டும். ஜனநாயகத்தை மதித்திருக்க வேண்டும். இந்தக் குறைகளே சர்வதேச அளவில் அவர்களுடைய பின்னடைவுக்குப் பெரும் காரணமாக அமைந்தன என்று கூறினார்.

இலங்கைத் தமிழர்களின் நீண்ட போராட்டத்துக்கு நீங்களும் ஒரு சாட்சியம் என்ற வகையில் சொல்லுங்கள், கடந்து வந்த பாதையில் தமிழர்கள் தரப்பில் தவறவிட்ட வாய்ப்புகள், வீணடித்த வாய்ப்புகள் என்று இன்றைக்கு நீங்கள் எதையெல்லாம் குறிப்பிடு வீர்கள்? எனக் கேட்கப்பட்ட மற்றுமொரு கேள்விக்குப் பதிலளித்த இரா.சம்பந்தன், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாங்கள் செயற்பட முன்வந்திருந்தால், அதற்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கியிருந்தால், ஒரு தீர்வு கிடைத்திருக்கும்.

அம்மையார் சந்திரிக்கா பண்டார நாயக்கவின் ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் தமிழ் மக்கள் பிரச்சினையில் மிக ஆக்கபூர்வமான, முற்போக்கான செயற்பாடுகளை அவர் முன்னெடுத்தார். அந்தக் காலகட்டத்தையும் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என நினைக்கிறேன் என்றார்.

அந்த இரு சந்தர்ப்பங்களும் வீணடிக்கப்பட்டதில் பிரபாகர னுக்கு முக்கிய பங்கு உண்டு.

அப்போது இது தொடர்பாக பிரபாகரனுடன் நீங்கள் பேசியது உண்டா? எனக் கேட்டபோது, இல்லை. அந்தச் சந்தர்ப்பங்களில் பிரபாகரனை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில்லை. என்றாலும், என் கருத்துக்களைப் பரிமாறியிருக்கிறேன்.

பின்னர், அவரைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்த காலகட்டத்திலும் இது தொடர்பான ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கிறேன். அந்த ஆலோசனைகளை அவர் உதாசீனப்படுத்தினார் என்று கூற முடியாது. ஆனால் அதன்படி அவர் நடந்து கொள்ளவில்லை.

உண்மையில், பிரபாகரனுடைய அரசியல் திட்டம் என்னவாக இருந்தது? உங்களுக்குப் பிடிபட்டதா? அவருடன் உறவில் இருந்தபோது நீங்கள் இதுபற்றி எல்லாம் பேசியது உண்டா? ஆக்கபூர்வமாக அவர் எதிர்வினையாற்றியது உண்டா? எனக் கேள்வி எழுப்பிய போது,

நாங்கள் நிறையக் கதைத்திருக்கிறோம். எங்களுக்குள் ஒருபோதும் கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டதாகச் சொல்லமாட்டேன. அவருடைய அரசியல் திட்டம பற்றி எனக்குத் தெளிவு கிடையாது. ஆனால், எப்போதும் நான் ஒரு விடயத்தைக் குறிப்பிடுவது உண்டு. புலிகளின் இராணுவ பலத்தை எல்லோரும் மதிக்கிறார்கள்.

ஆனால், அந்த இராணுவ பலமானது நம் மக்களின் அரசியல் பலமாக மாற வேண்டும். இல்லாத சூழலில், அந்த இராணுவ பலம், அதற்காகக் கொடுக்கப்பட்ட விலை, தியாகங்கள் யாவும் பெறுமதியற்றுப் போய்விடும்' என்று சொல்வேன். துரதிர்ஷ்ட வசமாக அந்த ஆலோசனை அவர்களால் ஏற்கப்படவில்லை என்றார். (செ-2)



யாழ்.நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் கலாசார விழா அண்மையில் நல்லூர் பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்: மானிப்பாய் செய்தியாளர்)

## எதிர்க்கட்சி வேட்பாளராக சோபித தேரர் போட்டி!

(கொழும்பு)

கோட்டே நாக விஹாரையின் விஹாராதிபதி மாதுலுவே சோபித தேரரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மாதுலுவே சோபித தேரரை நிறுத்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே பிரதான கோரிக்கையாக அமைந்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் கொள்கைகளின் அடிப்படையிலேயே தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கப்படும் என மாதுலுவே சோபித தேரர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவை உள்ளிட்ட பல தரப்பினரும் மாதுலுவே சோபித தேரரை தேர்தலில் ஈடுபடுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-2)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி!

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

திக்வல்ல ரத்மலே பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திட்டமிட்ட பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் திக்வெல்ல பிரதேசத்தில் தங்கியிருப்பதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.சந்தேக நபர்களை கைது செய்வதற்காக சென்றிருந்த போது சந்தேக நபர்கள் முச்சக்கர வண்டியொன்றில் இருந்தார்கள் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கர வண்டியில் இருந்த சந்தேக நபர்களை கைது செய்ய முயற்சித்த போது, முச்சக்கர வண்டி கவிழ்ந்ததாகவும் சந்தேக நபர்கள் விசேட அதிரடிப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்பாதுகாப்பு நோக்கில் விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.இந்த சம்பவத்தில் குறித்த இரண்டு சந்தேக நபர்களும் உயிரிழந்துள்ளனர். (செ-2)

# விக்னேஸ்வரனை விமர்சிப்பவர்கள் அரசிடமும் கேள்வி கேட்க வேண்டும்

## எதிர்ப்பு கருத்துக்களுக்கு மனோ பதில்



சர்வதேச விசாரணை கோரி வடமாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை கண்டிப்பவர்கள், 13ஐயும், 13க்கு மேலதிகமாகவும் வடமாகாண சபைக்கு அதிகாரம் வழங்குவோம் என ஐநா செயலாளர் நாயகத்துக்கு உறுதிமொழி வழங்கிவிட்டு, இன்று அதை அப்பட்டமாக மீறியுள்ள அரசாங்கத்தை நோக்கியும் கேள்வி எழுப்ப வேண்டும் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் தீர்மாணங்கள் தொடர்பில் தென்னிலங்கை கட்சிகள் தெரிவித்துள்ள கருத்துகள் தொடர்பில், கருத்து கேட்டபோது ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

வடமாகாண சபை வரம்பு மீறிவிட்டது என ஐக்கிய தேசிய கட்சி சொல்கிறது.

வடமாகாண சபையை கலைக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய சொல்கிறது.

வடமாகாணசபை அரசியல் சாசனத்தை மீறிவிட்டது எனவும், 13ஆம் திருத்தத்தில் சர்வதேச விசாரணை கோர அதிகாரம் இல்லை எனவும் ஐ.தே.க. எம்பியும், பிரபல சட்டத்தரணியுமான விஜேதாச ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்த சட்ட கருத்து நீதிமன்ற வவாதத்திற்கு உரியது. வடமாகாண சபையை எதிர்த்து வழக்கு தொடருவதற்கு சிலர் திட்டமிடுவது எனக்கு தெரியும். அதற்குதான் இந்த கருத்து அடித்தளம் இடுகிறது.

13ஆம் திருத்தத்தில் இருக்கின்ற [illegible] அதிகாரங்கள். இன்னமும் வடமாகாண சபைக்கு வழங்கப்படவில்லை என்பது பிரபல சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷவுக்கு தெரியாதது அல்ல.

பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படாதது ஒருபுறம் இருக்க, தெற்கின் முதல்வர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரங்கள் கூட இன்னமும் வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனுக்கு வழங்கப்படவில்லை.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும், சட்ட அறிஞருமான விக்னேஸ்வரனிடம் கேட்டால், வழங்கப்படாத அதிகாரங்கள் பற்றிய பட்டியலை தெளிவாக தருவார். இது இந்த அரசு செய்துவரும் அப்பட்டமான அரசியல் சாசன மீறல்.

ஆகவே அரசியல் சாசன மீறல் என்று வடமாகாண சபைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தால், அதே அரசியல்சாசன மீறல் என்று சொல்லி வடமாகாண சபை, மத்திய அரசாங்கத்துக்கு எதிராக வழக்கு தொடர முடியும். அதனால்தான் விக்னேஸ்வரனை விமர்சிக்கும் சட்டத்தரணிகள் அரசாங்கத்திடமும் கேள்வி எழுப்ப வேண்டும் என்று சொல்கிறேன்.

வடமாகாண சபையை கலைக்க வேண்டுமென்று சொல்லும் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் மேல்மாகாண அமைச்சர் உதய கம்மன்பில பற்றி நான் கருத்துகூற விரும்பவில்லை.

மாகாண சபைகளே வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு மாகாண சபையில் அமைச்சு பதவிகளையும் வகித்துகொண்டு, இன்று அதே மாகாணசபைக்கு போட்டியிடுவதற்காக நூறு, நூறு ரூபாய்கள் பணம் சேகரிக்கும் நபர்களை பற்றி நான் என்ன சொல்ல முடியும்? இவர்களை எதிர்வரும் தேர்தலுக்கு பின்புமேல்மாகாணசபைக்கு சென்று நேரடியாக கவனித்து கொள்கின்றேன் என்றார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாண்மை நில வறட்சியால் 2 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

## வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

முல்லைத்தீவு குமுழமுனை தண்ணி முறிப்புக்குள திருத்த வேலைகளின் சீரின்மை காரணமாக சுமார் 3 ஆயிரம் ஏக்கர் வேளாண்மை நிலம் நீரின்றி பாதிக்கப்பட்டு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை காணப்படுவதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நேரில் சென்று பார்வையிட்ட அவர் இதை நேரில் உறுதிப்படுத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 60 வருடங்களாக பெரியளவில் புனரமைப்புப்பணிகள் எதுவும் இடம்பெறாத நிலையில் 2013ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இக்குளத்தின் புனர்நிர்மாண வேலைகளுக்காக சுமார் 396.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

குளக்கட்டின் புனரமைப்பு, வாய்க்கால் பகுதிகளின் புனரமைப்பு, வான்பகுதி புனரமைப்பு, இரு வீதிகளுக்கான தாம்போதிகள், பாலங்கள் கட்டுமானம், நீர்த்திருப்பங்கள் மற்றும் குழாய் மூலமான நீர் இணைப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் சீரின்மை குறித்து பிரதேச மக்கள் வேலை ஆரம்பிக்கப்பட்டு ஓரிரு வாரங்களிலேயே அதிருப்தி தெரிவித்து பலருக்கும் அறிவித்திருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற சந்திப்புக்கள் தமக்கு திருப்தி தராத நிலையில் இது குறித்து எனக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து அப்பகுதி மக்கள் பிரதிநிதிகளுடன் நேரில் சென்று குளப்பகுதியை நேரில் ஆய்வு செய்தேன் .



இதன்போது புனர்நிர்மாணப் பணிகளில் பாரியளவில் சீரின்மை காணப்படுவதை அவதானித்தேன்.

அந்த வகையில் குளத்தில் 16 அடிக்கு நீர் இருந்தும் இந்நீர் வாய்க்கால் வழியாக முழு வயல்களுக்கும் சென்றடையமுடியாத நிலையிலேயே வாய்க்கால் கட்டுமானப்பணிகள் உள்ளன.

குளத்திலிருந்து திறந்து விடப்படும் நீர் காட்டிலும் காட்டாற்றிலும் பல இடங்களில் ஓடுவதை நேரில் அவதானிக்கமுடிந்தது. வீதி வேலைகள் சீரின்மையால் பிரயாணம் செய்ய முடியாதளவுக்கு சதுப்புநிலமாக காட்சியளிக்கிறது. மேலும் ஆற்றுக்கு மேலான குழாய் வழி இணைப்புக்கள் மூன்று , நான்கு அடிகள் தொங்கிய வண்ணமும் இதற்கான முத்துக்கள் தரையில் தொடுகையின்றியும் காணப்படுகிறது.

பாலங்கள் 60 ஆண்டுகளுக்கு முற்பட்ட தாம்போதிக்கு மேல் சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதால் இவை எந்நேரத்திலும் தகர்ந்து விழக்கூடிய அபாய நிலை நிலவுகிறது.

இது குறித்து நீர்ப்பாசன பொறியியலாளரிடம் நான் அங்கு கேட்டபோது, திருத்த வேலைகளில் தவறு இருப்பதை ஏற்றுக்கொண்ட அவர் எதிர்வரும் மார்ச்மாதம் 31 ஆம் திகதிக்குள் குறித்த வேலைகளைப் பொறுப்பெடுத்த நிறுவனம் திருத்தங்களை சீர் செய்து தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் எனவும் வேலைகள் திருப்தியானதென உறுதிப்படுத்தப்பட்டாலே 30 வீதமான மிகுதிப்பணம் வழங்கப்படும் என்பதையும் நேரில் என்னிடம் தெரிவித்தார். இது விடயத்தில் கவனம் செலுத்தும்படி அவரிடம் நான் வலியுறுத்தினேன்.

இப்புனர்நிர்மாணப் பணிகளில் காணப்படும் சீரின்மை காரணமாக சுமார் 3ஆயிரம் ஏக்கர் வேளாண்மை நிலம் நீரின்றி பாதிக்கப்பட்டு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலை மிகவும் வருத்தமளிக்கிறது.

இது தொடர்பான விடயங்களை நேரடியாக மாகாண விவசாய அமைச்சரிடம் தெரிவித்துள்ளேன் என்றார். (செ-6-9-250)

# பாடசாலை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

யுத்தத்தின் காரணமாக மோசமடைந்த பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச தட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட இறுதி யுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. அதிலும் எமது சமூகத்தின் எதிர்கால இருப்பைத் தாங்கியுள்ள பாடசாலைகள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. அவற்றை விருத்தி செய்வதற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள் முல்லைத்தீவுமாவட்டத்தைப் பொறுத்தவரை போதியதாகவில்லை.

இத்தட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் யுத்தத்தினால் மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளதுடன் விவசாயத்தையே நம்பி தமது குடும்பத்தைக் கொண்டு நடத்துகின்ற பெற்றோர்களின் பிள்ளைகளே அதிகமாக கல்வி கற்கின்றனர்.

இப்பாடசாலையில் இருந்து வருடாந்தம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று 20 வரையான மாணவர்கள் உயர்கல்விக்காக ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் போன்ற , பாடசாலைகளுக்கு சென்று அங்கும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

யுத்தத்தினால் பாடசாலைக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளமையால் இங்குள்ள மாணவர்களுக்கு வகுப்பறைகள் போதியதாக இல்லை. இப்பாடசாலை அதிபர் பாடசாலைக்கு இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அமைத்துத் தருமாறு தெரிவித்துள்ளார்.

நிச்சயமாக எதிர்காலத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் ஊடாக இப்பாடசாலையின் கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்படும். ஏனெனில் இன்று எமது மக்கள் அனைத்தையும் இழந்து வாழவே விருப்பம் இல்லாதவர்களாக உள்ளனர். இவ்வாறான மக்களுக்கு கல்வியே அழியாத சொத்தாகும். அதனை கட்டியெழுப்ப முன்வரவேண்டும் என்றார்.

அத்தோடு தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் இப்பாடசாலையின் மைதான புனரமைப்புக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்வதாகவும் உறுதியளித்தார். (2-9-250-266)

# புதுக்குடியிருப்பு காட்டு பிரதேசத்தில் துர்நாற்றம்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கைவேலிப் பகுதியை அண்டி வெண்புறா நிறுவனம் இயங்கி வந்த இடத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக அயல் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த காட்டுப் பகுதியில் கடந்த 5 நாட்களாக தொடர்ந்து துர்நாற்றம் வீசி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து பிரதேச சுகாதாரப் பிரிவினருக்கு அறிவித்துள்ள நிலையில் துர்நாற்றம் வீசுவதற்கான காரணம் கண்டறியப்படவில்லை.

இவ்வாறாக தொடர்ந்து துர்நாற்றம் வீசுவதால் நோய்த்தாக்கம் ஏற்படலாம் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே குறித்த காட்டுப்பகுதியில் திடீரென துர்நாற்றம் வீசுவதன் காரணத்தை சம்பந்தப்பட்டோர் கண்டறிந்து மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-254)

# மதுவரித்திணைக்களத்தை அமைத்து தரக்கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மதுவரித் திணைக்களத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியில் அலுவலகத்தை அமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையினால் 1983 ஆம் ஆண்டு குறித்த திணைக்களத்தின் கட்டடம் சேதமடைந்து அதன் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

ஆயினும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் திணைக்களத்திற்கென நிரந்தர அலுவலகம் அமைக்கப்படாது கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரியே முல்லை மாவட்டத்தின் பணிகளையும் ஆற்றி வருகின்றார்.

ஆனால் இவ்வாறாக ஆற்றப்படுகின்ற சேவை திருப்திகரமாக அமையவில்லையென மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இம் மாவட்டத்திற்கு என தனியார் மதுவரித்திணைக்களம் அமைக்கப்படாமையினால் இங்குள்ள பதனீர் விற்பனை நிலையங்கள் பதனீரை அடைப்பதற்கான அனுமதியைப் பெறுவதில் பெரும் இடையூறுகளை எதிர்நோக்குவதாகவும் இதனால் தமது வருமானம் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அது மாத்திரமின்றி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோதமான மதுபான விற்பனை, கசிப்பு உற்பத்தி விற்பனை என்பன இடம்பெற்று வருவதுடன் வயது வேறுபாடின்றி போதைப் பொருட்களை பயன்படுத்துதல். வாங்கிச் செல்லல் போன்ற செயற்பாடுகளும் அதிகரித்துள்ளதால் எதிர்கால சந்ததி சீர்குலைக்கப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு மதுவரித்திணைக்களத்தினருக்கே உரியதாகும்.



இந்நிலையில் முக்கிய கடமையாற்றி வருகின்ற திணைக்களத்தினரின் பணிகள் திருப்திகரமாக அமையாவிடின் மாவட்டத்தின் நிலைமை மிக மோசமாகிவிடுமென மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே முல்லைத்தீவு கடற்கரை வீதியில் மதுவரித்திணைக்களத்தினருக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியில் நிரந்தர அலுவலகத்தை நிறுவி கடமைகளை ஆற்ற சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-9-267)




# கும்பாபிஷேகம்

(பூந்தோட்டம்)

மன்னார் மாவட்டத்தின் இரணை இலுப்பைக் குளம் கிராமத்திலுள்ள மகாலிங்க சிவனாலயத்தின் கும்பாபிஷேகம் நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

மண்டலாபிஷேக இறுதி நாளான எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.(2-9-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதியில் இலங்கையர் உட்பட இரண்டாயிரம் பேர் கைது

சவுதிஅரேபியா வழங்கிய பொதுமன்னிப்பு காலத்தில் அங்கிருந்து வெளியேறாது தொடர்ந்தும் தங்கியிருந்த இலங்கை பிரஜைகள் உட்பட இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த வாரம் சவுதிஅரேபிய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை, ஏமன், எகிப்து, பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சட்டவிரோதமாக சவுதியில் தொழில் புரிந்து வந்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அங்கிருந்து நாடு கடத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

சவுதி அரேபிய அரசு வழங்கிய பொதுமன்னிப்பு காலத்தில் அங்கு சட்டவிரோதமாக தங்கிருந்த சுமார் ஒரு மில்லியன் வெளிநாட்டவர்கள் தமது நாடுகளுக்கு திரும்பினர்.

பொதுமன்னிப்பு காலத்திற்கு பின்னரும் அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை சவுதி அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். (2)

# மாத்தளை விமான நிலையத்தில் பறவைகளின் தொல்லை அதிகரிப்பு

மாத்தளை விமான நிலையத்தில் பறவைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானங்களை தரையிறக்குவதற்கும் விமானங்களை பறக்கச் செய்வதற்கும் பறவைகளினால் இடையூறு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பறவைகளைக் கண்டறிவதற்கு விசேட ராடார் ஒன்றை பயன்படுத்தவும், பறவைகளை விரட்ட அதி உயர் ஒலிகளைப் பயன்படுத்த முடியும் எனவும் சிவில் விமான சேவை அமைச்சின் செயலாளர் ரவீந்திர றொபேரு தெரிவித்துள்ளார்.

மாத்தளை விமான நிலையத்தின் விமானங்கள் சில பறவைகள் காரணமாக சேதமடைந்திருந்தமை தெரிந்ததே.

அண்மையில் சர்வதேச விமானமொன்றின் என்ஜின் பழுதடைந்திருந்தது. பறவைகளை விரட்டுவதற்கு வாகனங்களைப் பயன்படுத்த முடியும் எனவும் மற்றுமொரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் பறப்பதற்கு முன்னதாகவும், விமானங்கள் தரையிறக்கப்படுவதற்கு முன்னதாகவும் வாகனங்களைப் பயன்படுத்தி பறவைகளை விரட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சீனா, ஜேர்மனி, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளிலும் இவ்வாறான முறைமை பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



## திருமதி பொன்னையா நாகம்மா

காங்கேசன்துறை குரு வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகம்மா கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு Ogden Funeral Homes, 4164 Sheppard Avenue East, Toronto, on ,canada என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி இராஜரத்தினம் புவனேஸ்வரி

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரத்தினம் புவனேஸ்வரி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு 71 Rue Des Ronde aux, 75020 Paris, France என்னும் முக வரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி நடராஜா புவனேஸ்வரி

மட்டக்களப்பு திருப்பழுகாமத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா புவனேஸ்வரி நேற்றுமுன்தினம் சனிக்கி ழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## செல்வதுரை செல்வராஜா

உரும்பிராயை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் ,கொண்ட செல்வதுரை செல்வராஜா கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.



## அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ்

ஓய்வு பெற்ற புகையிரத திணைக்கள உத்தியோகத்தர் பாங்சால் வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.



## எல்லுப்போல தங்கராசா

சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட எல்லுப்போல தங்கராசா நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# மின்சார நாற்காலியில் மக்களை அமரவைத்துள்ளது அரசு!

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு ரணில் விசனம்

(கொழும்பு)


வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சட்டத்தின் வீழ்ச்சி தொடர்பில் ஜனாதிபதியுடன் பகிரங்கமான விவாதத்திற்கு தயாராக இருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொட்டக்கவெல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட் டார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டுக்காக சர்வதேச நீதிமன்றத்திற்கு சென்றாவது செய்ய வேண்டிய வேலைகளை செய்து நாட்டை காப்பாற்ற தயாராக இருக்கின்றேன்.

நாட்டு மக்களின் பிரச்சினைகளை ராஜபக்ஷ அரசாங்கம் ஜெனீவா மின்சார நாற்காலி என்ற போர்வையில் புறந்தள்ளி வருகிறது. ஜனாதிபதி தயார் என்றால் அவருடன் இந்த விடயங்கள் பற்றி நேருக்கு நேர் விவாதிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல போகின்றனர் என்று எவராவது கூறுவார்களாக இருந்தால், அவர்களுக்காக ஆஜராக நான் தயாராக இருக்கின்றேன்.



அதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக எப்படியான தீர்மானம் கொண்டு வரப்படும் என்பது எனக்கு தெரியாது.

ஆனால் ரோம் உடன்படிக்கையில் நான் கையெழுத்திடவில்லை என்பதால், இலங்கையில் உள்ள எவரையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியாது.

எவ்வாறாயினும் நாட்டு மக்கள் உணரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணாத ராஜபக்ஷ அரசாங்கம், மக்களை பாரிய மின்சார நாற்காலியில் அமர வைத்துள்ளதுடன் அவர்கள் சத்தமிடும் போது, மது அருந்துங்கள், தூளை பயன்படுத்துங்கள் என்று கூறுகிறது என ரணில் தெரிவித்தார். (செ-2)

# சிகரெட்டுக்களை கடத்த முயற்சித்தவர் கைது

சட்டவிரோதமான முறையில் சிகரெட்டுக்களை எடுத்து வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும்போது இந் நபரிடமிருந்து 2 ஆயிரத்து 800 சிகரெட்டுக்கள் அடங்கிய 15 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந் நபர் கொழும்புபைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஹெரோயின் வைத்திருந்த பெண் ஒருவர் மருதானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போது இப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 15 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் மாலிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (செ-2)

# அதிகமான வாக்குகள் பெற்ற வேட்பாளர்களுக்கே வாய்ப்பு

## ஐ.தே.க.தீர்மானம்

(கொழும்பு)

கடந்த மாகாண சபைத் தேர்தலில் அதிகளவான வாக்குகளை பெற்ற வேட்பாளர்களுக்கு மாத்திரமே இம்முறை தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை வழங்குவதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபை தீர்மானித்துள்ளது.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள 6 மாவட்டங்களில் கடந்த முறை தேர்தலில் போட்டியிட்டு அதிகமான வாக்குகளை பெற்றவர்களுக்கே இம்முறை சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அத்துடன் தேர்தலில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாதவர்களாக இருப்பார்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சிக்கு நேர்மையாக உழைத்தவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (2)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்

## பா.ம.க.வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கை மீது பன்னாட்டு விசாரணை தொடர்பாக ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் எதிர்வரும் மார்ச் மாதம் கொண்டுவரப்படவுள்ள அமெரிக்க தீர்மானம் குறித்த கலந்துரையாடல் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பசுமைத் தாயகம், வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை, தமிழக மாணவர் சங்கம், பாட்டாளி இளைஞர் சங்கம், தமிழ்ச் சமூக ஊடகப் பேரவை ஆகியவை இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தன,

இதில் பா.ம.க. இளைஞரணி தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

இலங்கை பிரச்சினை தமிழகத்தில் அரசியலாகி வருகிறது. அரசியலுக்காக இந்தக் கூட்டத்தை நாங்கள் கூட்டவில்லை. இதையடுத்து ஒரு குழு அமைத்து 2 வாரங்களில் கையெழுத்து இயக்கம், கடிதம் எழுதும் இயக்கம், ஆர்ப்பாட்டம், போராட்டம் ஆகியவற்றை தொடர்ந்து நடத்த இருக்கிறோம்.

இலங்கைக்கு எதிராக ஏற்கனவே கொண்டு வந்த இரண்டு தீர்மானங்களும் செயலிழந்து போய்விட்டது. எனவே இந்த முறை வரும் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும்.

இலங்கை பிரச்சினையை பொறுத்தவரை தமிழக அரசு அனைத்து அரசியல் கட்சிகளும் பங்கேற்கும் வகையில் கூட்டத்தை நடத்தி ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்றார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டங்களை நிறைவேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

(வத்தலக்குண்டு)

ஊழலுக்கு எதிராக காங்கிரஸ் கொண்டுவந்துள்ள சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தி நாளை செவ்வாய்க்கிழமை தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டுவிற்கு வருகை தந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஞானதேசிகன் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில்.


எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் குற்றச்சாட்டுகளை வெளியிடும் கெஜ்ரிவால் இந்தியாவிற்கு சட்டாப்பிள்ளையாக திகழ்கின்றார். இதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதனால் உருவபொம்மைகளை கோபத்தில் எரித்து வருகின்றனர். ஏற்கனவே மாநிலங்கள் அவையில் ஆறு மசோதாக்கள் நிலுவையில் உள்ளது. ஊழலுக்கு எதிராக மசோதாக்கள் ஆறு உள்ளது. இந்த மசோதாக்களை நிறைவேற்ற பாரதீய ஜனதா கட்சியினா இடையூறு ஏற்படுத்தவுள்ளனர்.

ஆகவே ஊழலுக்கு எதிரான காங்கிரஸ் கொண்டு வந்துள்ள சட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி நாளை தமிழகம் முழுவதும் ஆர்பாட்டம் நடத்த உள்ளதாக தெரிவித்தார்.

தமிழத்தில் மீனவர்கள் பிரச்சினையென்றால் என்னை தான் தொடர்பு கொண்டு பேசுவார்கள். நான் நேரடியாக தொடர்பு வைத்துள்ளேன். இரட்டைமடி வலை பயன்படுத்த கூடாது என கோரிக்கை வைத்துள்ளனர். இராமேஸ்வரத்தில் ஒரு சில மீனவர்கள் இந்த வலையை பயன்படுத்துகின்றனர். ஆகவே அடுத்த கூட்டம் கொழும்பில் நடக்க உள்ளது. அப்போது முக்கிய முடிவு எடுக்கப்படும். மீனவர்களுக்கு தமிழ்நாடு காங்கிரஸ்கட்சியும் மத்திய அரசும் உறுதுணையாக இருககின்றது என்ற பிரச்சாரம் மீனவர்களை போய் சேர வேண்டும். (2)

# பிரிவினை அரசியலை கையிலெடுத்து பா.ஜ.க. விஷவிதைகளை விதைக்கிறது

## சோனியா குற்றச்சாட்டு



(குல்பர்கா)

***ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற பசியால் பிரிவின்ன அரசியலை கையிலெடுத்து பா.ஜ.க. விஷ விதைகளை விதைத்து வருகிறது என காங்கிரஸ் தலைவர் சோனியா குற்றம்சாட்டியுள்ளார்.***

வடக்கு கர்நாடகாவின் குல்பர்கா பகுதியில் பொதுக் கூட்டம்ஒன்றில்பேசிய சோனியா, பா.ஜ.க.வையும் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியையும் கடுமையாக தாக்கி பேசியுள்ளார்.

ஏராளமான முனிவர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி, இந்தியா. பல்வேறு கலாசாரங்களின் அடையாளமாக விளங்கும் இந்த நாட்டில், சிலர் பிரிவினை அரசியல் செய்து விஷ விதைகளை விதைத்து வருகின்றனர். அத்தகையவர்களுக்கு மக்கள் இடம் அளிக்கக்கூடாது. அரசியல் விளையாட்டின் காரணமாக வன்முறையையும் சிலர் தூண்டி வருகின்றனர். பா.ஜ.க.வுக்கும் இன்னும் சில எதிர்க் கட்சிகளுக்கும் ஆட்சியில் அமர வேண்டும் என்பது மட்டும் தான் ஒரே நோக்கம். தன்னை பற்றிய பெருமைகளை கூறுவதிலேயே சிலர் பிஸியாக உள்ளனர். அவர்களா நாட்டிற்கு நல்லது செய்வார்கள்? நிச்சயமாக ஒரு போதும் செய்ய மாட்டார்கள். ஆட்சியை பிடிப்பது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு அதற்காக அவர்கள் பல்வேறு சதி வேலைகள் செய்து வருகின்றனர். மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

காங்கிரஸ் ஒருபோதும் அதிகாரத்தை யாசிக்கவில்லை. நாட்டை பற்றியும், மக்களை பற்றி மட்டுமே அக்கறை கொண்டுள்ளது. நாட்டில் வறுமையை ஒழிக்க வேண்டும் எனவும், ஏழைகளுக்கு சுயமரியாதையை பெற்று தர வேண்டும் எனவும் காங்கிரஸ் அக்கறை கொண்டுள்ளது.

சமூகத்தில் சகோதரத்துவத்தையும், அமைதியையும் கொண்டு வரவே காங்கிரஸ் விரும்புகிறது. வேகமான வளர்ச்சியை நாடு பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் காங்கிரஸ் அரசு பாடுபட்டு வருகிறது. ஊழலுக்கு எதிராக போராட வேண்டும் என உறுதி பூண்டுள்ளதாலேயே தகவல் அறியும் உரிமை சட்டத்தையும், லோக்பால் சட்டத்தையும் காங்கிரஸ் அரசு கொண்டு வந்துள்ளது.

ஆனால் பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வெற்று வாக்குறுதிகளை அளிப்பதுடன், தவறான குற்றச்சாட்டுக்களையும் கூறி வருகின்றன.

கர்நாடகாவில் முந்தைய பா.ஜ.க. அரசு ஊழல் செய்ததாலேயே மத்திய அரசின் மகர்த்மா காந்திய தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் கர்நாடகா மக்களை வந்தடையவில்லை. ஆனால்தற்போதைய காங்கிரஸ் அரசு அதை வெற்றிகரமாக செயற்படுத்தி வருகிறது. (2)

## தாய்லாந்தில் வன்முறை

(பாங்கொக்)

தாய்லாந்தில் நேற்று பாராளுமன்றத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்கு பெட்டிகள், வாக்கு சீட்டுகள் உள்ளிட்ட பொருட்கள் வாக்கு சாவடிக்கு அனுப்ப தலைநகர் பாங்கொக் புறநகரில் லக்சி எனும் இடத்தில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களில சிலர் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே வாக்குப் பதிவுக்கான பொருட்களை எடுத்து செல்லவிடாமல் தடுக்க திரண்டனர். லக்சியில உள்ள மாவட்ட அலுவலகத்தை முற்றுகையிட்டு மறியல் செய்ய புறப்பட்டனர்.

இதை அறிந்த பிரதமர் யிங்லக் ஷினவத்ரா ஆதரவாளர்கள் ஆத்திரம் அடைந்து போராட்டக்காரர்களுக்கு எதிராக திரண்டனர். பின்னர் பேரணியாக வந்த எதிர்க்கட்சியினரை தடுத்து நிறுத்தினர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

அப்போது, இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் கற்கள் மற்றும் கட்டைகளால் தாக்கி கொண்டனர். ஒரு கட்டத்தில் இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. அதில் 7 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இரு தரப்பினருக்கும் இடையேயான கலவரம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

போராட்டம் தீவிரமடைந்த போதிலும் பாங்கொக்கில் இன்று வாக்கு பதிவு நடந்தது. ஏராளமான பொதுமக்கள் வரிசையில் நின்று வாக்களித்தனர். (2)



டுனிஷியா சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை துணை செயலாளர் வில்லியம் பெர்ன்ஸ், தலைநகர் டுனிஷில், பிரதமர் மேக்தி ஜோமாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதைப் படத்தில் காணலாம்

## சரக்கு கப்பல் கவிழ்ந்தது; 12 பணியாளர்கள் பரிதாபமாக பலி

(சனா)

ஏமன் நாட்டின் ஹட்ரமவ்ட மாகாணத்தை அண்டியுள்ள கடல் பகுதியில் சரக்கு கப்பல் கவிழ்ந்த விபத்தில் 12 இந்திய பணியாளர்கள் பரிதாபமாக பலியாகினர்.

பிரபல தொழிலதிபருக்கு சொந்தமான அந்த கப்பல், கார் டயர் மற்றும் உதிரிப்பாகங்களை ஏற்றிக் கொண்டு ஏமனின் அல் முக்காலா துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருந்தது.

ஹட்ரமவ்ட் மாகாணத்தை அண்டியுள்ள கடல் பகுதியில் கடந்த வியாழக்கிழமையன்று வந்தபோது எதிர்பாராத விதமாக தள்ளாடிய கப்பல், சில நிமிடங்களுக்குள் நிலைகுலைந்து, கவிழ்ந்து கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது.

இது தொடர்பான தகவல் மிக தாமதமாகவே அரசு அதிகாரிகளின் கவனத்துக்கு வந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் கப்பலில் பணியாற்றிய 12 இந்தியர்கள் கடலில் மூழ்கி காணாமல் போய் விட்டதாகவும், அவர்களை தேடிக் கண்டுபிடித்து மீட்கும் பணிகளில் கடலோர காவல் படையினர் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் ஹட்ரமவ்ட் மாகாணத்தை சேர்ந்த அரசு உயரதிகாரிகள் நேற்றுமுன் தினம் தெரிவித்தனர். (2)

# இந்தோ. சினாபங்க் எரிமலை வெடித்தது

## -14 பேர் உயிரிழப்பு-



இந்தோனேஷியாவின் சினாபங்க் எரிமலை வெடித்து சிதறியதல் பாடசாலைச் சிறுவர்கள் 4 பேர் உட்பட 14 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவிலுள்ள இவ் எரிமலை கடந்த சில மாதங்களாக குமுறிக் கொண்டிருந்தது.

எனவே அப்பகுதியை சுற்றியிருந்தவர்களை வெளியேற்றி, பாதுகாப்பான இடங்களில் அரசு தங்க வைத்தது.

இந்நிலையில் இதன் சீற்றம் மேலும் அதிகரித்து நேற்று முன்தினம் வெடித்து சிதறி குழம்புகளை கக்கியது. இதில் அப்பகுதியை சேர்ந்த பாடசாலை சிறுவர்கள் உட்பட 14 பேர் பலியாயினர். இதுபோன்று நடபபது இதுவே முதல்முறையாகும்.

எரிமலை வெடிப்பு ஏற்பட்ட பகுதியிலிருந்து 2.7 கிலோ மற்றர் தொலைவில் உள்ள சுகமெரியா கிராமத்தின் வீதியோரத்தில் சாம்பல்களால் மூடப்பட்ட உடல்கள் கிடந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

14 பேரின் உடல்களும் அடையாளம் காணப்பட்டன, சிறுவர்கள் 4 பேரும் எரிமலையை வேடிக்கை பார்க்கச் சென்றபோது அதில் சிக்கிக் கொண்டனர்.

இந்த எரிமலைச் சீற்றத்தில் மேலும் பலர் உயிரிழந்திருக்க வாய்ப்புள்ளது, எரிமலைக்கு அருகில் உள்ள பாதைகளில் அதிக அளவு வெப்பம் கொண்ட சாம்பல்கள் பரவிக் கிடப்பதால் மீட்புப் பணி பாதிக்கப்பட்டுள்ளது என தேசிய பேரிடர் மீட்பு அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (2)

## வான்பாதுகாப்பு மண்டலத்திற்கு அமெரிக்கா கடும் கண்டனம்

தெற்கு சீனக் கடல் மீது புதிய வான் பாதுகாப்பு மண்டலத்தை அமைக்கும் சீனாவின் முயற்சிக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வோஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத்துறையின் ஊடகத் தொடர்பாளர் மேரி ஹார்ஃப் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தெற்கு சீனக் கடல் பகுதி மீது புதிய வான் பாதுகாப்பு மண்டலத்தை அமைக்கும் சீன அரசின் முயற்சி அயல் நாடுகளிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தக் கூடிய, தன்னிச்சையான நடவடிக்கையாகும்.

இது உலக நாடுகளிடையே பதற்றத்தை உண்டாக்கும் செயலாகும்.

அதுமட்டுமின்றி தெற்கு சீனக் கடல் எல்லைப் பிரச்சினை ராஜீய ரீதியாக தீர்க்கப்படும் என்று சீனா அளித்துள்ள உறுதி கேள்விக் குறியாகிவிடும்.

சர்ச்சைக்குரிய பகுதியில் புதிய வான் பாதுகாப்பு மண்டலங்களை அறிவிக்கவோ அல்லது நிர்வாக ஒழுங்கு முறை நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ தடை விதிக்கப்பட்டுள்ள இடத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளும் அதனை செய்யாமல் இருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்தி உள்ளோம்.

இந்த விவகாரத்தில் சீனா எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என வலியுறுத்துகிறோம்.

தெற்கு சீனக் கடல் பகுதியில் புதிய வான் பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்க சீனா நடவடிக்கை எடுத்து வருவதாக ஜப்பான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது முக்கியத்துவம வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

கிழக்குச் சீனக் கடல் பகுதியில் கடந்த ஆண்டு சீனா தன்னிச்சையாக வான் பாதுகாப்பு மண்டலத்தை அறிவித்தது.

அதற்கு பல்வேறு நாடுகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. தெற்கு சீனக் கடல் பகுதி முற்றிலும் தங்களுக்கே சொந்தம் என சீன அரசுரிமை கொண்டாடி வருகிறது.

ஆனால் பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புரூனே போன்ற நாடுகள் சீனாவின் செயலுக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்து வருகின்றன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரின் செயல்கள், அவர்கள் சிந்தனைக்குச் சிறந்த விளக்கங்களாகும்.
~ ஜான் லாக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்களின் நிலைப்பாட்டை வடக்கின் முதல்வர் தெளிவுபடுத்தியுள்ளார்

முப்பது வருடகால விடுதலைப் போராட்டத்தின் பின்னரான தமிழ் மக்களின் மனநிலை எப்படி இருக்கின்றது என்று சிங்களப் பேராசிரியர்கள் யாரேனும் வடபகுதிக்கு நேரில் வந்து ஆய்வு செய்ததான பதிவுகள் எதுவுமில்லை.

வட பகுதிக்கான விஜயத்தின்போது தமிழர்களின் நிலைப்பாடு என்ன? என்று அவர்கள் தங்கள் கல்வியியல் நண்பர்களிடம் கேட்டறிந்திருக்கலாம். ஆனால், இலங்கை அரசுக்கு தமிழ் மக்களின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதான ஆய்வுகள் எதுவும் போருக்குப் பின்பாக நடக்கவில்லை. அத்தகையதொரு ஆய்வு தேவை என்று அரசு நினைத்ததாகவும் தெரியவில்லை.

அரசைப் பொறுத்தவரை தமிழர்களின் நிலைப்பாட்டை அறிய, புலனாய்வுத்துறை போதும் என்று நினைக்கின்றது.

இதன் காரணமாக பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியாயினும் அங்கு புலனாய்வு தேவை என்ற நிலைமையில் இலங்கை அரசின் செயற்பாடு உள்ளது.

உண்மையில் தமிழ் மக்களின் மனநிலையை அறிவது ஒன்றே இனப்பிரச்சினைக்கான தீர்வாக இருக்க முடியும்.

ஆனால் இது பற்றி அரசு எந்தக் கவனமும் கொள்ளாமல் சட்டவிரோதக் குடியேற்றம், நில ஆக்கிரமிப்பு, தமிழர்கள் எந்த வகையிலும் தங்கள் உரிமை பற்றி சிந்திக்காத வகையில் என்னென்ன நடவடிக்கைகள் செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் செய்வது என்ற முடிவில் அரசின் நகர்வு இருக்கின்றது.

அரசின் இத்தகைய போக்குகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்துவதாக அமைகின்றதே தவிர, வேறு எந்த வகையிலும் தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதாக இல்லை.

சுருங்கக் கூறின் புலிகளின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் மக்களைக் கூட; விடுதலைப் புலிகள் செய்தது சரி என்று எண்ணும் அளவிற்கு அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

நிலைமை இதுவாக இருப்பினும் தமிழ் மக்களின் சமகாலப் போராயுதம் மௌனம் என்பதாகவே இருக்கின்றது.

கதைப்பதால்- உணர்ச்சிவசப்படுவதால் எந்தப் பயனுமில்லை. இப்போதைய நிலையில், மௌனமாக இருந்து, நம்இருப்பை உறுதி செய்வதே முதற் பணியாகும் என்பது ஒவ்வொரு தமிழ்க் குடிமகனதும் நினைப்பாகும்.

இந்த மௌனத்தின் ஆழமான அடித்தளம் சர்வதேச விசாரணை தேவை என்பதாகவே இருக்கின்றது.

இதைத்தான் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் "சர்வதேச விசாரணையிலேயே தமிழர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்" என தெளிவாகக் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வடக்கின் முதலமைச்சர் தெளிவுபடுத்தியதை அரசு கவனத்தில் கொண்டால், இலங்கைத் திருநாட்டின் எதிர்காலம் ஆரோக்கியமானதாக அமைய இடமுண்டு.

# தவறான ஆற்றுப்படுத்தல்களில் இளைஞர்களின் உள்ளங்கள்!

## திட்டமிட்டு நடப்பதாக சுட்டிக்காட்டுகிறார் முதலமைச்சர்

இளைஞர்களின் உள்ளங்களை பிழையாக ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் இளைஞர்களின் உணரவுகள் முழுவதும் தவறாக ஆற்றுப்படுத்தப்பட்டு விடுமோ என அஞ்சும் நிலை உருவாகியிருக்கின்றது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் 2ஆவது தடவையாக நடத்திய 2ஆவது இளைஞர் மாநாடு மற்றும் "இளைஞன்" நூல் வெளியீடு என்பன மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனதுரையில், இளைஞர், யுவதிகள் மத்தியில் அளவளாவ சந்தர்ப்பம் அளித்த அனைவரிற்கும் நன்றிகள். எந்தவொரு சக்தியும் ஆக்கபூர்வமாகவும் அழிவிற்காவும் பயன்படுத்த முடியும். ஒளி தருகின மின்சாரம் எமது உடலில் பட்டு எம்மைப் பொசுக்கி விடுவது போலவே ஒவ்வொரு சக்திக்கும் இரு வேறுபட்ட வடிவங்கள் உண்டு. வருங்காலம் நல்ல முறையில் அமைய வேண்டுமானால் ஆக்கத்திற்கான சக்தியையே பின்பற்றல் வேண்டும். மாணவர்களினதும் இளைஞர்களினதும் சக்தியை ஆக்கபூர்வமாக சாதிக்க ஸ்தாபிக்கப்பட்டவையே இவ் இளைஞர் கழகங்கள்.

இளைஞர் சமூகம் யதார்த்தத்திற்கு ஒத்துப் போதல் வேண்டும். பெரியவர்களை மதிப்பதோடு அவர்களது சொல் கேட்டு நடக்க முற்படல் வேண்டும்.

இளைஞர் பருவமானது ஏன் எதற்கு எப்படி யாருக்காக எனப்பல கேள்விகளைக் கேட்டு சிந்திக்கும் பருவம். இது இளைஞர்களின் சுபாவம். பெரியவர்கள் இளைஞர்களின் செயற்பாடுகளை மழுங்கச் செய்யும் விதமாக இப்பகுதியில் செயற்படுவதாக அறிகின்றேன். இருந்தும் இவ் இளைஞர்கள் காட்டியிருக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை.

தாம் நினைத்ததை முடிக்க வேண்டும் என உத்வேகம் இளம் பராயத்தினரிற்குரியது.

உடலை இளவயதில் முறையாகக் கவனித்தால் முதுமையில் அது உதவும் என்பதை சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

இன்று பல வழிகளில் இளைஞர்களின் உள்ளத்தை பல வழிகளில் கொண்டு செல்ல முற்படுவதாக அறிகின்றேன். இவ்வாறு இளைஞர்களின் உள்ளங்கள் தவறாக ஆற்றுப்படுத்தப்பட்டு விடுமோ என அஞ்சுகின்றேன்.

சிலரால் போதை மருந்துகள் இளைஞர்கள் மத்தியில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள் நுழையாத பழக்கங்கள் தற்போது திட்டமிட்டு சில சக்திகளால் உள்நுழைக்கப்படுகின்றது என்பதை உணரவும் அறியவும் முடிகின்றது.

இவ்வாறான பொறிகளில் அகப்படாது தப்புவதற்கு இளைஞர்கள் திட்டங்களை தீட்ட வேண்டும்.

கனிகைகள் இல்லம் இப்போது புழக்கத்திற்கு வந்துள்ளது.

வறுமையின் கோரப்பிடியில் வதங்கி நிற்கும் யுவதிகள், கணவனால் கைவிடப்பட்ட யுவதிகள் எனப்பலர் இவ் இல்லங்களிற்கு கொண்டு வரப்பட்டு செயற்பட வைக்கப்படுகின்றார்கள்.

சில்லறை இன்பங்களுக்கு அகப்பட்டு விடக்கூடாது. அகப்படும் பட்சத்தில் நோயும் வறுமையும் வந்து சேரும்.

இளமையில் கல் என்றாள் ஔவை பிராட்டி. கல்விக்கு முன்னுரிமை கொடுத்த இனம் எம் இனம். கொடிய போரினால் மிகப்பெரும் வெற்றிடம் நம் கல்விப்புலத்தில் ஏற்பட்டுள்ளது. இதனை நிரப்ப இளம் பராயத்தினர் முன் வரல் வேண்டும்.

அரசியல் கட்சிகளில் கூட முதியவர்களைக் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன. அடுத்தகட்ட தலைவர்களை இளைஞர் யுவதிகளிலிருந்து அடையாளம் கண்டு முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

எமது மக்கள் பிற நாடுகளில் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர் என்பதிலிருந்து எங்களாலும் அவை முடியும். சூழல் தான் எம்மை தடுத்து வைத்திருக்கின்றது. எல்லா இளைஞர் யுவதிகளும் முன்புபோல் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.

கோவில்கள் கட்டுவது முதல் மக்கள் நலதிட்டங்களில் இளைஞர்கள் ஈடுபடல் வேண்டும். இளைஞர்கள் உடல், உள்ளம், அறிவு, ஆத்மா ஆகிய நான்கையும் ஆரோக்கியமாக வைத்திருக்க ஆவன செய்ய வேண்டும்.

மக்கள் நலத்திட்டங்களில் ஈடுபடும் இவ்வாறான இளைஞர்கள் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும். நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இளைஞர்களே முன்வாருங்கள் என அழைப்பு விடுக்கின்றேன் என்றார். (செ-2-23)

# குறுந்திரைப்பட வெளியீடு




(யாழ்ப்பாணம்)

ஜே.எம்.ஜோசப்மேரியின் **அப்பாவின் மிதிவண்டி** குறுந் திரைப்பட வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.30க்கு செல்வமஹால் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் துரைராஜா ஜீவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கல்லூரி அதிபர் வண. டி.எஸ்.சொலமன் அடிகள், நிறைவாழ்வு மைய இயக்குநர் தயாளினி தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் பங்குத் தந்தை ஜேம்ஸ் அடிகளார் ,யாழ்.பல்கலைக்கீழக கலைப்பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் க.ஞானபாஸ்கரன், ஹரிஹரணன் பிறின்டேர்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் சி.ராஜ்குமார், கௌரவ விருந்தினர்களாக செயற்றிறன் அரங்க இயக்குநர் தே.தேவானந், திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9)

# தீக்குளிக்க பிக்கு முயற்சி

(கொழும்பு)

காலி பிரதேசத்தில் விகாராதிபதியான பிக்கு ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி மாவட்ட, மாவட்டவில ஸ்ரீ தீபாராம விகாரையின் விகாராதிபதியான புளத்சிங்களே தம்மாலோக்க தேரர் நேற்று அதிகாலை விகாரைக்கு அருகில் தனது உடலில் எண்ணெயை ஊற்றி தீ மூட்டிக் கொள்ள முயற்சித்துள்ளார்.

அப்போது விகாரையில் இருந்த உதவியாளர்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து அதனை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

விகாரைக்கு அருகில் இருக்கும் தேவாலயம் ஒன்றில் தொடர்ந்தும் ஜெபக் கூட்டங்களை நடத்தி வருவதே இவர் தீக்குளிக்க முயற்சித்தமைக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தேவாலயம் விகாரைக்கு அருகில் இருப்பது பிரச்சினையாக இருப்பதாகவும் அதனை அங்கிருந்து அகற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் பிக்கு கோரிக்கை விடுத்துள்ளார். (செ-2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அறிவின் எல்லை



நாம் என்னென்ன நினைக்கின்றோமோ அந்த அளவு அறிவிலே விரிந்திருக்கின்றோம். விரிந்து அறிந்த நிலை ஒன்று. அந்த நிலையை ஒட்டி குறிப்பிட்ட அளவுக்கு இயக்கம் (Localising action) ஒரு பொருள் மீது தனியாக அதைப் பயன்படுத்தும் போது அப்போது விரிந்த நிலையிலே அறிவாலே எவ்வளவு விளக்கம் பெற்று இருக்கின்றோமோ அந்த விளக்கம் அத்தனையும் சிறு சிறு விடயங்களை நாம் தெரிந்து கொள்ளும்போதோ அதன் மீது மனம் செலுத்தும்போதோ விரும்பும்போதோ அத்தகைய விரிந்த அறிவினுடைய தன்மை அத்தனையும் அந்த சிறு இயக்கத்திலும் பயன்படும்.

இப்பொழுது ஒரு மாநிலத்தை (Province) ஆளக்கூடிய ஒரு பெரிய அதிகாரி இருக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்குச் சாதாரண ஒரு ஊருக்கான திட்டம் ஒன்றை அவர் உருவாக்கும்போதோ, அதைக் கண்காணிக்கும்போதோ மாநிலம் முழுமையும் நிர்வகிக்கக்கூடிய நிலையிலே அந்த ஒரு சிறு விடயம் கூடச் சிந்திக்க முடியும்.

அந்த இடத்திலே இருந்து சிந்திக்கக்கூடிய ஒரு எழுத்தர் (Clerk) அல்லது மற்றவர்கக்கு அந்த இடத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்கக்கூடிய மனம், அறிவு இருக்கும். அதுபோல நம்முடைய செயலுக்கும் தன்மைக்கும் இந்தப் பண்பாட்டிற்கும் தக்கவாறு இந்த அறிவு எந்த எல்லையில் நிற்கிறது என்பதாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்; யாழ். நகரில் சிறந்த அணியாக கொக்குவில் கே.சீ.சீ.சீ தெரிவு

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்துக்கான யாழ். நகரில் சிறந்த கழக அணித்தெரிவில் கே.சீ.சீ.சீ அணி முன்னிலை பெற்றுள்ளது.

மேற்படி வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் கடந்த 5 ஆண்டுகளாக 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்திவருகின்றனர். துடுப்பாட்ட அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் இப் போட்டியினை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டி 01.01.2014 தொடக்கம் 31.01.2014 வரை 5, 20 ஓவர் போட்டிகள் (NPL வெற்றிக்கிண்ணம்) நடைபெற்று முடிந்துள்ளது. அவற்றிற்கு வழங்கப்பட்ட புள்ளிகள் அடிப்படையில், கே.சீ.சீ.சீ. விளையாட்டுக் கழகம் 11.70 புள்ளிகளுடன் முதலாமிடத்தினையும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 6.30 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தினையும் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் 4.37 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தினையும் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 4.26 புள்ளிகளுடன் நான்காமிடத்தினையும் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் 1.93 புள்ளிகளுடன் ஐந்தாமிடத்தினையும் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 1.65 புள்ளிகளுடன் ஆறாமிடத்தினையும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 1.62 புள்ளிகளுடன்ஏழாமிடத்தினையும்யாழ்ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 1.52 புள்ளிகளுடன் எட்டாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

கடந்த கால முடிவுகளின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு, 2011 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக் கழகமும் 2012 ஆம் ஆண்டு கே.சீ.சீ.சீ. விளையாட்டுக் கழகமும் 2013 ஆம் ஆண்டு யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் முதலிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

# நியூஸ்ரார் இருபது- 20 போட்டி சென்றல் வி.கழகம் வெற்றி



நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20:20 கிரிக்கெட் ஆட்டமொன்றில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.


கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். சென்றல் விளையாட்டு கழகம் 3 விக்கெட்டுக்களால் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை வென்றது.


முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் கழகம் 19.4 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் மோகன் -16, சஜீவன்-15, உத்தமகுமரன் -15 ஓட்டங்களைப் பெற்றனர்.


பந்துவீச்சில் சென்றல் அணி சார்பாக சுபாதீஸ், றொகான் தலா 3 விக்கெட்டினையும் யசிந்தன், சலிஸ்ரன், ரஜீவ்குமார் தலா 4 இலக்கினையும் வீழ்த்தினர்.

பத்துவீச்சில் நியூஸ்ரார் சார்பாக றம்மியராகுலன், சாகீஸ்,சிந்துஜன் தலா 2 இலக்குகளையும் உத்தமகுமரன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்









யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 2014 ஆம் ஆண்டுக்கான இல்லமெய்வன்மைப் போட்டி கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது... (க-23)

# உலக கிண்ணம் 2015




2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ண தெரிவுகாண் போட்டித் தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் துணை அங்கத்துவ நாடுகள் சார்பாக பங்கு பற்றும் அணிகள் 4 உம் முடிவு செய்யப்படுள்ள நிலையில், 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடருக்கான இறுதி இரண்டு குழுக்களும் தற்போது முடிவாகியுள்ளன. அந்த வகையில் இன்று உலகக்கிண்ண தெரிவுகாண் போட்டியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து அணி குழு ஏ இல் இடம் பிடித்துள்ளது. தோல்வியடைந்த ஐக்கிய அரபு இராச்சிய அணி குழு பீ இல் இடம் பெற்றுள்ளது.

2015ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ண போட்டித் தொடருக்கான குழுக்கள் இவ்வாறு அமைந்துள்ளன.

**குழு ஏ**

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, பங்களாதேஷ், நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், ஸ்காட்லான்ட்

**குழு பீ**

தென் ஆபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், சிம்பாவே, அயர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் (க)

# துவாரகன் சதம் — யூனியன் கல்லூரியை வீழ்த்தி யாழ்.இந்து அபார வெற்றி



துவாரகன்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளிற்கிடையிலான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த மாதம் 30,31 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி யாழ். இந்துவின் பந்துவீச்சினை தாக்குப்பிடிக்க முடியாது 76 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ரகுபதி 41, விதுஷன் 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் மதுஷன் 19 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் பானுகோபன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்சில் துடுப்பாடிய யாழ்.இந்துக் கல்லூரி துவாரகனின் கன்னிச் சதம் கைகொடுக்க 6 விக்கெட்டுக்களை இழந்து 441 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் துவாரகன் ஆட்டமிழக்காது 109, ருக்ஸ்மன் ஆட்டமிழக்காது 50, கல்கோகன் 78, மதுஷன் 51, கஜன் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சார்பாக நிரோஜன் மற்றும் றஞ்சித் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

365 ஓட்டங்கள் பின்னிலையிலிருந்து



மதுஷன்

தனது 2ஆம் இனிங்சில் துடுப்பாடிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 179 ஓட்டங்கள் மாத்திரமே பெற்றது.

இதில் பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பாக மதுஷன் 4 விக் கெட்டுக்களையும், பானுகோபன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் போட்டியில் ஒரு இனிங்ஸ் மற்றும் 186 ஓட்டங்களினால் யாழ்.இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

இதில் யாழ்.இந்து வீரன் துவாரகன் கன்னிச் சதம் கடந்தார். மதுஷன் இரு இன்னிங்சிலும் சேர்த்து 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்து அணிக்கு தொடரும் சோகம்

# 3-வது இருபது-20 போட்டியிலும் ஆஸி அணிக்கே வெற்றி



இங்கிலாந்து அணிக்கெதிரான 3-வது இருபது - 20 போட்டியிலும் ஆஸி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டியில் ஆஸி அணி 84 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 போட்டிகளைக் கொண்ட இருபது-20 போட்டித் தொடரை ஆஸி அணி 3:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி இங்கிலாந்து அணியை மீண்டும் வைட்வோஷ் செய்தது.

அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி அங்கு 3 போட்டிகளைக் கொண்ட இருபது - 20 தொடரில் பங்கேற்றது.


இத்தொடரின் முதலிரு போட்டிகளில் வெற்றி பெற்று ஆஸி அணி தொடரைக் கைப்பற்றிய நிலையில், சம்பிரதாயபூர்வமான போட்டியான இப்போட்டி சிட்னி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைக் குவித்தது.



துடுப்பாட்டத்தில் ஆஸி அணி சார்பாக அணித் தலைவர் ஜோர்ஜ் பெய்லி (ஆட்டமிழக்காமல்) 48, கமரூன் வைட் 41, ஆரோன் பின்ஞ் 30, பென் கட்டிங் 29 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ரூவேர்ட் பிரோட் 3 விக்கெட்டுக்களையும், ஜோர்டன், பிரஸ்



ணன், ரூட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

196 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, ஆஸி அணியின் பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் 17.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து வெறும் 111 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 84 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அதிகபட்சமாக ஓய்ன் மோர்கன் 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆஸி அணியின் பந்துவீச்சில் குல்ரர் நைல், மக்ஸ்வெல், ஜேம்ஸ் முரிஹெட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ஆஸி அணியின் தலைவர் ஜோர்ஜ் பெய்லி தெரிவானார்.

---

## வட மாகாண...

தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதிகளில் இந்த வைத்தியர் பற்றாக் குறை அதிகமாக காணப்படுகின்றது.

ஆகவே வட மாகாணசபையின் சுகாதார அமைச்சினால் ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்களை பெற்று தற்போது இவ் வைத்தியசாலைகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கின்றோம்.

அந்தவகையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் மத்திய சுகாதார அமைச்சரை சந்தித்து வைத்தியர்களின் தேவை குறித்து நிலைமைகளை விளக்கியதன் அடிப்படையில் 125 உள்ளக பயிற்சி வைத்தியர்களை நியமிப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொதுமக்களிற்கு சிறந்த சுகாதார சேவையை வழங்குவதன்மூலம் மக்களது அசௌகரியங்களை குறைக்கலாம் என்ற அவசியத்தினை வலியுறுத்தி விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று வட மாகாண சுகாதார அமைச்சினால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2014 பெப்ரவரி 1ஆம் திகதியிலிருந்து 101 நாட்களுக்கு அமுலாக்கும் வகையில் பின்வரும் திட்டங்களை அமுல்படுத்துமாறு சகலபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அறுவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத் திட்டங்களாவன

01.உணவு கையாளும் நிறுவனங்களின் தரத்தினை உறுதிப்ப டுத்துவதற்காக உணவு கையாளும் நபர்களுக்கான மருத்துவ சோத னை செய்தல்.

02.புகைப்பிடித்தலைத் தடுப்பதற்காக புகையிலைப் பொருட்களைவிற்பனை செய்யாத உணவகங்களை இனங்கண்டு அவர்களை கௌரவப்படுத்தல்.

03.பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தினை திறம்பட செய்வதற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் தனியான அறையொன்றை ஒதுக்குதல்.

04. முதியோர்,குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட சேவை வழங்கும் வகையில் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் தனியான கரும பீடங்களை அமைத்தல்.

05.மருத்துவ சிகிச்சை நிலையங்களில் நோயாளிகளுக்கான நியமன முறையினை அறிமுகப் படுத்துவதன் மூலம் ஒவ்வொருவருக்கும் தனியான சந்திப்பு நேரங்களை ஒதுக்குவதால் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

06. தொற்றாத நோய்களுக்கான மருத்துவ பரிசோதனையை கிராம மட்டத்தில் மேற்கொள்ளல்.

முன்பள்ளி சிறார்களுக்கான விசேட மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளல் என வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இத் திட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். (செ-4)

---

## சர்ச்சைக்குள்ளாகும்...

சட்டத்தரணிகள் சங்கத்தின் 7-வது கூட்டமொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது. அதன்போது சட்டத்தரணிகள் ஒன்றிணைந்த சங்கத்தின் இணைப்பாளர் சட்டத்தரணி கபில கமகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையில் கடந்த 14-ம் திகதி இடம்பெற்ற கூட்டத தொடரின்போது இலங்கை அரசினை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் இலங்கையில் இடம்பெற்றது இனப் படுகொலைக்கு ஒப்பானதுதான் எனவும் இவ்விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு விசாரணை செய்ய வேண்டுமென ஏகமனதாக தீர்மானமொன்றினை நிறைவேற்றியிருந்தது.

இத்தீர்மானத்தினை சிங்கள கடும்போக்குவாதிகள் விமர்சித்திருப்பதோடு வடக்கு மாகாண சபைக்கு எதிராகசட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூச்சலிட்டு வந்தனர்.

சர்வதேச விசாரணையை கோரிய வடக்கின் தீர்மானம் தெனனிலங்கையில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இறுதிப்போரின ரணங்கள் நிறைந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவாலயம் அமைப்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரனை நினைவு கூருவதற்கே எனவும் சிங்களக் கடும்போக்கு அமைப்புகள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றன.

இவ்வாறான ஒரு நிலையில் வடக்கு மாகாண சபை வரம்புமீறி செயற்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியும், வடக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவும் வடக்கு மாகாண சபை அரசியல் சாசனத்தை குழப்பிவிட்டது எனவும் 13-ம் திருத்தச் சட்டத்தில் சர்வதேச விசாரணையைக் கோரும அதிகாரம் மாகாண சபைக்கு இல்லை எனவும் ஐ.தே.கவின் எம்.பியும் பிரபல சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ கோரியுள்ளார்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை அரசியல் சாசனத்தை மீறிவிட்டது. அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள் என போரினவாத அமைப்புகள் கோரி வரும் நிலையில் வடக்கு மாகாண சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தரணிகளின் ஒன்றிணைந்த சங்கம் களமிறங்கியுள்ளது.

நேற்றையதினம் இடம்பெற்ற சங்கத்தின் கூட்டத்தின்போதே அதன் இணைப்பாளர் சட்டத்தரணி கபில கமகே இதனை தெரிவித்துள்ளார்.

மாகாண சபை அதிகார எல்லைக்குள் மனித உரிமை விடயம் உள்ளிடங்கவில்லை எனவும் வடக்கு மாகாண சபையில் சர்வதேச விசாரணை கோரப்பட்டது சட்டவிரோதமானது. ஆகையால் இத்தீர்மானத்திற்கு எதிராக உயர் நீதிமன்றம் செல்லவேண்டி உள்ளதாகவும் இணைப்பாளர் மேலும் தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற நீதியரசராகவிருந்து தற்போது வடக்கின் முதலமைச்சராகியுள்ள சி.வி.விக்னேஸ்வரன் இது குறித்து உடனடியாக எவ்வித கருத்தும் வெளியிடவில்லை.

எனினும் சர்வதேச விசாரணை கோரும் விடயத்தில் முதலமைச்சர் சட்டவரம்புக்குள் நின்று செயற்படுகின்றார் எனவும் சர்வதே விசாரணயில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டு செயற்படுகிறார் எனவும் அரசியல்ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (செ-4)

---

## 21 அடி உயரமான...

பெற்றது.

இதன்போது செந்தமிழ் சிவதீட்சை வழங்கும் வைபவமும், சிவநற்பணி மன்றங்களின் அறப்பணிச் செயற்திட்டங்களில் இணைந்து கொண்டோர் சிவதொண்டர்களையும் சிவ மங்கையர்களையும் உறுதிப்பிரமாணம் எடுத்து இணைந்து கொண்டனர்.

சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தை சூழவுள்ள ஆலயங்களில் இருந்த சிவனடியார்களால் ஓம் நமசிவாய மந்திர பாராயணத்துடன் பூரண கும்பங்கள் கொண்டுவரப்பட்டு சம்புநாத ஈஸ்வரருக்கு அபிஷேகம் இடம்பெற்றது.

ஈழத்திலுள்ள ஆலயத்தில் முதன முதலாக செந்தமிழ் திருமுறையில் திருகுடமுழுக்கு இந்த ஆலயத்திலேயே இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் ஊடகவியலாளர்...

பொலிஸ் மோப்ப நாய் பிரிவைச்சேர்ந்த ரோஹி என்றழைக்கப்படும் மோப்பநாய் ஒரு கிலோ மீற்றர் தூரம் மோப்பம் எடுத்துச் சென்று அசோக சுற்று வட்டத்திற்கு அருகில் நின்று கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கொலைக்குப்பயன்படுத்தியதாகக் கூறபபடும் துளையிடும் ஆயுதம் கத்தியின் கைபிடி வேறாகவும் கத்தி வேறாகவும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

40 வயதான ஊடகவியலாளர் மெல் குணசேகர, உயிரிழக்கும்போது ஃபிட்ச்ரேட்டிங்ஸ லங்கா (Fitch Ratings lanka) எனற நிறுவனத்தின் துணைத் தலைவராக இருந்துள்ளார்.

இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனங்கள் சிலவற்றல் வணிகத்துறை செய்தியாளராகவும் அவர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இராணுவ குடி...

இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் மீள்குடியேற்றத்தை விரைவு படுத்துமாறு சர்வதேச ரீதியில் அழுத்தம் கொடுக்கப் பட்டுவரும் நிலையில் வடக்கில்,ராணுவத்தினரின் புதிய படைமுகாம்கள் அமைக்கும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இடம பெயர்ந்த தமிழ்மக்கள் நலன புரி நிலையங்களிலும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தங்கிவாழ்ந்து வரும் நிலையில் அந்த மக்களுக்கு சொந்தமான காணிகளில்இராணுவத்தினரை குடும்பங்களுடன்குடியேற்ற அரசாங்கம்நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதேவேளை வலிகாமம வடக்கிலிருந்து, டம்பெயர்ந்த தமிழ்மக்களை அவர்களின் சொந்த டங்களில்மீள்குடியேற்றுமாறு பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இராணுவக் குடியிருப்பு பலாலி என்று பெயர் பொறிக்கப்பட்ட வீதி வளை பலாலி வீதியில் திறந்து வைககப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# ஊடகவியலாளர் கொலை...

கூடிய அளவுக்கு துப்பு கிடைத்திருப்பதாக இலங்கை பொலிஸ பேச்சாளர் எஸ்.எஸ.பி. அஜித் ரோஹண தெரிவித்தார்.

எங்களுக்கு துப்பு கிடைத்திரு க்கிறது. குறிப்பாக, கை விரல் அடையாளம் ஒரு துப்பாகக் கிடைத்துள்ளது. அதே நேரம், அவரது வீட்டுக்கு அண்மித்த வீட்டிலிருந்த பாதுகாப்பு சி.சி.டிவி கெமரா மூலம் ஒரு நபர் பற்றிய தகவல் கிடைத்திருக்கிறது என்றார் அஜித் ரோஹண.

இலங்கையில்கடந்த காலங்களில ஊடகவியலாளர்கள் பலர் கொல் லப்பட்டுள்ளனர். சிலர் கடத்தப்பட்டனர். பலர் தாக்கப்பட்டுள்ளனர். அவற்றுக்குப் பொறுப்பாளிகள் யார் என்று அதிகாரிகள் இது வரை கண்டுபிடிக்க வில்லை.

இந்த நிலையில், ஊடக வியலாளர்களை இலக்கு வைத்து இப்படியான கொலைகள் தொடர்ந்தும் நடக்குமோ என்று அச்சம் எழுந்துள்ளதாக இலங்கை சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் ஜயசேகர கூறுகிறார்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் எதிர்கொணட அபாயக ரமான சூழ்நிலைகளைக் கருத்தில எடுத்துப் பார்க்கும்போது, இந்தக் கொலை எமக்கு இன்னும் அச்சத்தைத் தான் ஏற்படுத் துகிறது. எனவே இந்தக் கொலையுடன்சம்பந்தப்பட்டவர்களை அவசரமாக கண்டுபிடிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு காவல்துறைக்கு உள்ளது. இந்த சம்பவத்தின் பின்னால் இருப்பவர்கள் யார் என்பதை காவல் துறை இந்த உலகுக்கும் நாட்டுக்கும் ஊடகத் துறையினருக்கும்தெளிவுபடுத்த வேண்டும் என்றார் சுனில் ஜயசேகர.

இலங்கையில் வணிக மற்றும் பொருளாதாரத் துறைச் சம்பந்தப்பட்ட செய்திகளை வழங்கும் ஊடக வியலாளர்களுக்கு கடந்த காலங்களில் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமையையும் சுனில் ஜயசேகர சுட்டிக்காட்டினார். (செ-4)


## வீடு வாடகைக்கு

யாழ். - மணிக்கூட்டு வீதியில் உள்ள வசதியான வீடு வாடகைக் குண்டு.

077 036 6123





சீரடி சாயி மந்திரில் நவசக்தி லிங்கமும் நூதன துவஜஸ் தம்பமும் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் (04.02.2014)

- பிரதிஷ்டை (03.02.2014) மாலை- 3.30 மணி முதல் 6 மணி வரை (ஜலாதிவாசம், தான் யாதிவாசம், சயனவாசம்)
- எண்ணெய்க் காப்பு (04.02.2014) காலை 7.30 மணிமுதல் மாலை 3 மணிவரை
- கும்பாபிஷேகம் மாலை 4 மணிக்கு நடைபெற்று 5.15 மணிக்கு சீரடி சாயி நாதர் சர்ப்ப வாகனத்தில் மாடவீதி வழியாக வலம் வருவார்.

சீரடி சாயி மந்திர்
314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆலயத்தினர்,
திரு.துஸ்யரூபன்
(அவுஸ்திரேலியா)

T.P: 0777222568

(5495)


# நேபாள இராணுவ தள...

பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம்கொழும்பை வந்தடைந்த நேபாள நாட்டின் பிரதான இராணுவத் தளபதி உள்ளிட்ட குழுவினர்நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

யாழ்.பலாலி விமானத் தளத்தில் உலங்கு வானூர்தி யில் வந்திறங்கிய இந்தக் குழுவினரை யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் வரவேற்றனர்.

இதேவேளை இராணுவத்தினரின் விசேட அணி வகுப்புடன் செங்கம்பள வர வேற்பு அளிக்கப்பட்டதோடு தென்னிலங்கை கலாசார முறைப்படியும் வரவேற்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# ஜே.வி.பியின்...

செய்யப்பட உள்ளதாக முன்கூட்டியே செய்திகள் வெளியிடப்பட்டிருந்தது.

அதேவேளை ஜே.வி.பியின் பொதுச் செயலாளராக ரில்வின் சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாநாட்டில் ஜே.வி.பியின் கொள்கைப் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

கட்சியின் தலைமைத்துவ பதவிக்காக அநுரகுமார திஸாநாயக்க விஜித ஹேரத் கே.டி.லால்காந்த மற்றும் பிமல் ரத்நாயக்க ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்த போதிலும், புதிய தலைவராகஅனுரகுமாரதிஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.(செ-4)


## இத்தாலியில் படிக்க, உழைக்க உடன்பறக்கலாம்

100 % சட்ட ஆலோசனைக்கு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com

## கனடாவில் படிக்க, உழைக்க கையிலுள்ள காசேபோதும்

ஒருமுறை ஆலோசனை பெற்றுப் பாருங்களேன்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com





## IELTS Special Class

May - 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் Saturday & Sunday 8.30 a.m to 11.30 a.m திங்கள் தொடக்கம் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை 3 மணி -5 மணி வரை நடைபெறும்

- * SPECIALLY IN READING
- * MORE THAN 10 YEARS EXPERIENCE
- * VOCABULARY and GRAMMAR
- * EXTENDED SPEAKING PRACTICE

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL" வகுப்புக்கள் - 15.02.2014 ஆரம்பம்

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவுக்குச் சமீபமாக) Tel: 0778803887

(C-6407)



## CAMBRIDGE ENGLISH PET UNIVERSITY OF CAMBRIDGE

* இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன
* நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்



பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

Exam Fee : Rs.8300/=
Exam Date: 17.05.2014

Subjects : Reading,Writing,Listening,Speaking

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

புதிய பிரிவுகள் 10.02.2014 ஆரம்பம்

Course Schedule

| | Mon, Tuse, Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.30-10.30; 10.30-12.30 | 2.00-5.00 |

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவுக்குச் சமீபமாக) Tel: 0778803887

(C-6407)



## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்



WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772961062

(C-6405)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org